வரகவி பாரதியார்

ஆசிரியர் :
பண்டித, வித்துவான் தி. இராமானுசன்
தமிழ் விரிவுரையாளர், மதுரைக் கல்லூரி,
மதுரை.

வெளியிடுபவர் :
A. T. N. நாகலிங்கம் & கம்பெனி
புது மண்டபம், மதுரை.

உரிமை பதிவு செய்யப்பட்டது

1948

[விலை ரூ.0-14-0

இந்தப் புத்தகம்

வரகவி பாரதியாரின் வாழ்வினை வரலாற்று முறையிலே தருவது, இந்நூல். அவர் வரலாறு தருவது, இஃது ஒன்றுமட்டுமன்று; பல உள்ளன. அவைகளே எனக்கும் இதனை எழுத வழி காட்டின.

எனினும், அவை யாவும் நம் வரகவியைத் தேசியத் துறையிலேதான் இழுத்து நிறுத்திக் காட்டுகின்றன. நிறைந்த புலமையும், பரந்த தேசியமும் ஒன்றோடு ஒன்று என்றும் இணைந்தவை! ஆகவே, அமரகவியின் வாழ்க்கை வரலாற்றைப், புலமை நோக்குடன் எடுத்துக் காட்ட யான் நெடு நாளாக விரும்பினேன். அஃது, எனது பேரன்பர் A. T. N. நாகலிங்கம் அவர்கள் நன்முயற்சியால், இன்று ஈடேறுகிறது. அதனை அச்சிட்டுப் புத்தக வடிவில் தந்த அவருக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி உரியதாகுக!

இதனுள் பாரதியார் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, அவர் 'சீரிய தமிழ்ப் புலவர்' என்னும் நிலையிலே காட்சியளிக்குமாறு கோவைப்படுத்தியுள்ளேன். என் முயற்சியில் முழுவெற்றி கிட்டாது போகலாம்! முதலிலே முயன்ற தகுதி எனக்குப் பயன் அளித்தால், அதுவே போதுமானது.

இச்சிறு நூலினை, மாணவருலகம் படித்துப் பயன் பெறுதல் நமக்குமட்டும் அல்லாமல், நாட்டிற்கே நல்லது. அவ்வாறு பயன் தர, கல்வித்துறைத் தலைவர்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறேன்.

மணிநகரம்,
மதுரை.

தி. இராமானுசன்

பொருளடக்கம்

எண்		பக்கம்
	இந்தப் புத்தகம்	iii
I	தெய்வப் புலவர்	1
II	பிறப்பும் இளமையும்	9
III	கல்விப் பயிற்சி	19
IV	தொழில் முயற்சி	31
V	புதுவை வாழ்க்கை	47
VI	கடையம் திரும்புதல்	63
VII	வாழ்வின் முடிவு	78
VIII	இயற்றிய நூல்கள்	85
IX	அவர் அமரர்	94

THE MADURA TAMIL

வரகவி பாரதியார்

I தெய்வப் புலவர்

உலகில் கோடிக்கணக்கான மக்கள் பிறந்திருக்கிறார்கள் ; இறந்திருக்கிறார்கள். ஆயினும், அவர் அனைவரையும் பற்றி வருங்கால மக்கள் நினைப்பது இல்லை ; ஒரு சிலரை மட்டுமே உலகம் என்றென்றைக்கும் மறவாது போற்றி ஏற்றுப் பாராட்டுகின்றது ; இறந்தும் இருப்பவர்களாகவே அவர்களைக் கருதிப் பேசுகிறது. சுவாமி விவேகானந்தர், புத்தர் பெருமான், இயேசுநாதர், கவி அரசர் கம்பர், முகமது நபி போன்ற பெரியார்கள் அவ்வரிசையிலே சேர்ந்தவர்கள். அதற்குக் காரணம், மற்றைய மக்களைப்போல, அவர்கள் உண்டு உடுத்து உறங்கி மட்டும் வாழ்க்கையைப் போக்காமையே ஆகும். அவர்கள் உலகம் செல்லும் தீய வழியிலே சென்று அமையாது, தாங்களும் நல்வழி நின்று, நாட்டையும் நலமுறச் செய்தார்கள். அதனாலேயே, அவர்களைத் தெய்வப் பிறப்பாகக் கருதி இன்றும்

எல்லாரும் போற்றுகின்றனர். எல்லாப் புலவர்களையும் பிற்காலத்தவர் பாராட்டுவதில்லை. மற்றப் புலவர்களைப் போல அன்றிக் காலத்தின் தேவையுணர்ந்து நாட்டை நலம்படுத்திய புலவர் பெருமக்களைத்தான் நம்மவர்கள் மறவாது போற்றிக் கொண்டாடுகின்றார்கள். கம்பரைக் 'கவிச்சக்கரவர்த்தி' என்று போற்றினது தமிழுலகம். வள்ளுவர், 'தெய்வப்புலவர்' என்று சிறப்பிக்கப் பெற்றார். இன்றும், நாம் இவ்விருவரையும் மறவாது போற்றி விழாக் கொண்டாடுகின்றோம். மற்றைய யாவரினும் இவர்கள் சிறந்து நின்றதற்குக் காரணம் உண்டு. வள்ளுவர், நாட்டின் போக்குணர்ந்து அன்று தேவைப்பட்ட வழியிலே நின்று, தெய்வத்திருமறை பாடிச் சிறந்தார்; கம்பரோ, பத்தி நிலையை வளர்க்கும்படி, இராமாவதாரத்தைப் பாடிக் கவிச்சக்கரவர்த்தியாராகி மக்கள் உள்ளங்களிலே அரசு வீற்றிருந்தார்.

கம்பரையும் வள்ளுவரையும் போற்றின தமிழுலகம், இன்று பாரதியாரையும் தெய்வப் புலவராகக் கண்டு போற்றுகின்றது; விழாக் கொண்டாடுகின்றது; 'தமிழிலே மறுமலர்ச்சியின் முதற்றந்தையாரவர்,' என்று புகழ்ந்து பேசுகின்றது. பாரதியார், பல புலவர் தம் வழியிலே நின்று தமிழ்வளர்க்கும் நிலைக்கு ஓர் இலட்சியப் புலவராகிவிட்டார்! ஏன்? சுருங்கச் சொன்னால், எல்லாருக்கும் பொதுவான தமிழ்—அகத்தியர் தமிழ், மூவர் தமிழ், கோதை தமிழ்—என்று சிறந்தவர் பெயரால் புகழப்படுவது

போலவே, இன்றைய தமிழ் 'பாரதியார் தமிழ்' என்று சிறப்பிக்கப்படுகிறது என்று சொல்லலாம்.

இப்படித் தமிழ் இலக்கியத்திலே ஒரு பெரு மாறுதலை உண்டு பண்ணி அதன் முழுமுதற்கருத்தாவாய் விளங்கின பெரும்புலவர் பாரதியார். கம்பருக்குப் பிறகு 'கவிச்சக்கரவர்த்தி' என்னும் பட்டம் பெற்றுச் சிறந்தவர், நாம் அறியப் பாரதியார் ஒருவரே ஆவர். பாரதியார் தமக்கு முன்பிருந்த பல புலவர்களின் பெருமையையும், 'கதிரவன்முன் மின்மினி' என ஆக்கிப் புகழொடு விளங்கினார். இதற்குக் காரணம் என்ன? காலத்தின் தேவை உணர்ந்து அவர் கவி பாடினார்; தமிழின் தாழ்நிலை அறிந்து சீர்திருத்தினார்; தமிழ் வளர, எந்த 'நாட்டுப் பற்று' மிகமிகத் தேவையோ, அதனைத் தம் பாக்களால் உருவாக்கினார்; பெண்டிரையும் பாமரரையுங்கூடத் 'தமிழ் நம்முடையது!' என்று கருதி மகிழும்படி தமிழைப் 'பொது உடைமை' ஆக்கித் தந்தார். மற்றைய புலவர்கள் போல, 'நாட்டுநிலை எப்படி இருந்தாலும், நாம் கண் மூடிக் கற்பனை உலகில் உலவி வருவோம்,' என்று அவர் இருந்துவிடவில்லை. காலத்தின் தேவை உணர்ந்து கவிபாடிய புலவரிடத்து, கடவுளியல் கண்டு போற்றுவது மக்கள் இயல்பு. தமிழ் நாடு அப்படியே பாரதியாரைக் கலைமகளின் மறுவடிவாகக் கண்டது; காண்கிறது; இனியும் மறவாது கண்டு நிற்கும்.

பாரதியார் பிறந்த காலநிலையினைப் பார்ப்போம்: அரசியலிலே, தமிழ் நாடு, அடிமைத்

தனம், சீர் கெட்ட பொருளாதார நிலை ஆகிய இவை இரண்டினுல் மட்டுமன்றி, கலைத்துறையிலும் சீரழிந்துதான் இருந்தது. அதற்கு முன் அவ்வளவு தாழ்நிலை உற்றிருந்ததாகக் கதை அளவிலும் நாம் கேட்டறிய முடியாது! நாட்டிலே, மக்களுக்கு அளவற்ற ஆங்கில மோகம் இருந்தது. ஆங்கிலம் ஆளும்மொழியாய் அமைந்திருந்தது. 'அறிவின் பயன் ஒழுக்கம்,' என்னும் தலையான நோக்கம், அன்று இல்லை. அறிவிற்கும் ஆற்றலுக்கும் இயைபு கற்பிக்கப்பட்டு வந்த இடைக்காலத்தின் முடிவு நிலை அப்பொழுது. தமிழிலே புலவர் எல்லாரும், யமகம், திரிபு, அந்தாதி, கலம்பகம் என்னும் நூல்களையே இயற்றி அளவின்றிக் குவித்துக்கொண்டிருந்தனர். நாட்டின் நிலை தெரிந்து, மக்கள் சுகவாழ்க்கையைச் சீர்திருத்தும் பான்மை வாய்ந்த அறிவு நூல்கள் இரண்டொன்றேனும் அன்று இயற்றப்படவில்லை.

மற்ருேர் அச்சம் தரும் நிலையும் தமிழுக்கு அன்று இருந்தது: தமிழே—பொது மக்கள் பேசும் பேச்சுத்தமிழ் ஒன்று; புலவர்கள் போற்றும் இலக்கியத்தமிழ் ஒன்று—என்று இரு வேறு வகைப்படப்பிரிந்து இயங்குவதாயிற்று. நாட்டிலே தமிழுக்குச் செல்வாக்கில்லை. ஆகவே, பொது மக்களுக்குத் தமிழைக் கட்டாய முறையிலே பொதுமையிற்பயின்று பழந்தமிழ் இலக்கியங்களைப் புரிந்து முன்னேறும் அளவிற்கு வழி துறை இல்லை. புலவர்களேனும் இலக்கியத் தமிழைச் சிறிது நெகிழப் பண்ணிப் பொது மக்

களுக்கு ஆர்வம் பிறப்பித்து, அவர்களே தமிழின் தொடர்பு கொள்ள விரும்பும் வகையிலே தமிழை வளர்த்தார்களோ என்றால், அதுவும் இல்லை. எனவே, பேச்சுத்தமிழும் இலக்கியத் தமிழும் இயைந்து வளர்ந்து, மக்கள் வாழ்க்கைக்கு நலம் புரியும் வகையிலே, 'தமிழ் நிலை' அந்நாளில் அமையவில்லை. இந்த நிலைமை நீடித்திருந்தால் தமிழ் மொழியின் முடிவு என்ன ஆகும்? வடமொழி ஏட்டளவிலே இன்றும் செழிப்புற்ற மொழியாய் இருந்து வந்தும், பேச்சளவிலே இறந்தமொழியாய்க் கருதப்பட்டிருப்பது போன்ற நிலையினைத்தானே தமிழும் அடைந்திருக்க வேண்டி வரும்? மேலும், மக்கள் ஆங்கில மோகத்தால் தமிழைப் புறக்கணித்து அதனை வளர்க்கத் தவறியதனால், 'நாள்தோறும் வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான உண்மைகளையும் பிற நாட்டு நல்லறிஞர் கண்ட கலை உணர்வுகளையும் சித்திரித்துக் காட்டும் திறமையே தமிழுக்கு இல்லை,' என்று தமிழனே சொல்லிவிடும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது! இவ்வளவு சீர்கேடுற்ற நிலைதான் பாரதியார் பிறக்கும் முன் நாட்டிலே கால்கொண்டிருந்தது. இலக்கிய உலகம் ஒரு பெரிய மாறுதலை—ஆக்கம் நோக்கிய முன்னேற்றத்தை—எதிர் பார்த்துக் கொண்டிருந்த காலம் அது என்பதை நாம் தெளிவாக அறியலாம்.

இவ்வளவு தாழ்வான சூழ்நிலை தமிழ் நாட்டிலே தமிழ் மொழிக்கு மட்டுந்தான் அமைந்திருந்தது என்று சொல்லிவிட முடியாது. அர

சியல் அடிமையாய் அல்லலுற்றுப் பேணுவா ரற்ற நிலையிலே ஆதரவின்றித் தவித்த எல்லா இந்தியநாட்டுப் பழைய மொழிகளுமே, ஒரே மரணப் படுக்கையிலேதான் கிடந்தன. இம் மாதிரி நேரங்களிலே இரண்டொரு புலவர்கள் கூடி இலக்கிய உலகிலே ஒரு பெருமாறுதலை உண்டு பண்ணிவிட முடியாது! காலச் சூழ்நிலை யிலே பண்பட்டு வளர்ந்து, பிறரால் செயற்கரிய செயல் புரியும் பேராற்றலும் பெரு வீரமும் உடைய 'தெய்விகப் புலவன்' ஒருவனாலேதான் நாட்டின் போக்கினையும் இலக்கிய நோக்கினை யும் மாற்றி அமைக்க முடியும்.

இவ்வாறு, நாடு முழுவதிலுமே மொழி நலம் கெட்டிருந்தது. அது காரணமாய், மக் கள் அகவாழ்வு, ஒளிமழுங்கி மாசுபடிந்திருந்தது. மக்களுக்கு வருங்கால நிலையை உருவாக்கிக் கொள்ள உதவ வேண்டிய கலை, கொலை செய் யப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தது. இந்த நேரத்திலே, 'இனியும் வாளாவிருத்தல் தகாது,' என்று கலைமகள் கருதிப் பேரருள் புரிந்தாள். வங்க நாட்டிலே அவளருளால் இரவீந்திரர் தோன்றி வங்க மொழிக்குப் புத்துயிர் தந்தார். உருது மொழியிலே கவிஞர் இக்பால் தோன்றி மறுமலர்ச்சி உண்டு பண்ணினர். மலையாளத் திலே கவிஞர் வல்லத்தோல் பிறந்து புது வழி யிலே மலையாள மொழியைச் செப்பனிட்டார். அதே மாதிரி வரகவி பாரதியார் தமிழ் நாடு செய்த தவப்பயனாய் நம்மிடையே வந்து அவ தரித்தார்.

அங்ஙனம் அவதரித்த பாரதியார் அக்காலத்திலே தமிழ் உற்றிருந்த தாழ்நிலையைத் தவறாது கண்டுணர்ந்தார். 'மெல்லத் தமிழ் இனிச்சாகும்!' என்று கூறுமாறு கிடந்த மரணநிலையிலே தமிழ் குற்றுயிரோடும் குறையுடலோடும் அவருக்குக் காட்சி அளித்தது. 'மேற்கே வளரும் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்களைக் கூறும் திறமை தமிழினுக்கு இல்லை,' என்று கூறும் பேதையர் மொழி அவர் காதில் விழுந்தது. 'ஆ! இந்த வசை நம் செந்தமிழினுக்கு எய்திடலாமா?' என்று உள்ளம் துடித்து வசை ஒழிக்க அவர் வீறிட்டு எழுந்தார்; எளிய இனிய பதச் சேர்க்கையால், புதிய புதிய சந்தங்களையும் மெட்டுக்களையும் அமைத்து, பாமரருக்கும் விளங்கும் பாடல்கள் பல பாடினார்; பண்டிதர்களும் விரும்பும் சுவை நலங்களை அவைகளிலே கூட்டினார்; பொது மக்கள் பெரிதும் விரும்பும் தேசியக் கருத்துக்களை அவைகளில் ஏற்றினார். இத்தகைய முறையிற் காவியங்கள் பல தந்து, சங்கத் தமிழுக்கும் பிற்காலத் தமிழுக்கும் இடையே அமைந்த பாலம் போன்று அவைகளை இணைந்து உதவுமாறு செய்து சென்றார். செத்துக் கிடந்த தமிழை உயிர்ப்பித்தார்; நாட்டினரைத் தேசாவேசம் கொள்ளும்படி தூண்டினார்; தமிழ் நடைக்கு ஒரு புதிய மின்சார ஆற்றலை ஈந்தார். தேமதுரத் தமிழோசை இன்று தெருவெலாம் பரவும் வகை, அன்று வழி செய்த புண்ணியப் புலவர் அவரே என்று நாம் கொண்டாடுகிறோம். பிற அறிஞர் அனைவரும், 'பெண்

பிறவி இழிந்ததெனக் கருதும் மடமை நாட்டிலே கலைமகள் காட்டிய ஆண் உருத்தோற்றமே நம் பாரதியார்,' என்று போற்றுகின்றனர். இதில் பொய்யும் புகழ்ச்சியும் இல்லை என்று தெரிய, நாம் அவரது பிறப்பு வளர்ப்பு வரலாறு பற்றி அறிவது இன்றியமையாதது.

II பிறப்பும் இளமையும்

பாண்டி நன்னாடு, தமிழுக்கும் முத்துக்கும் பண்டு தொட்டே பெயர் போனது. அதிலும் சிறப்பாக, நல்லதமிழ் வழங்கும் பகுதியைச் சார்ந்தது எட்டையபுரம். அவ்வூரின் பெயருக்குப் பழங்காலமுதலே பல புலவர்கள் பிறந்து சிறந்த புகழளித்துச் சென்றிருக்கின்றார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அவ்வூர், இன்றும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு நிலைக்களம். அவ்வூருக்கு உரிய அரசர்கள், என்றென்றைக்கும் தமிழைத் தங்கள் கண்போலப் போற்றி வளர்த்தவர்கள். பல பெருந்தமிழ்ப் புலவர்கள் அரசவையை அணிசெய்த காலம் அங்குண்டு. புரவலரின் அன்பு மிக்க ஆதரவு கருதி, பழுமரம் நாடும் பறவைகள் போலச் சிறந்த புலவர்கள் பழங்காலத்தில் எட்டைய புரத்தை நாடி வருவது வழக்கம். அக்காலங்களில் மதுரையை ஒத்து எட்டையபுரமும் தமிழ் வளர்த்தது.

எட்டையபுர மன்னரின் தமிழன்புக்கும் ஆதரவிற்கும் இலக்காக வேண்டும் என்று வந்த புலவர்களுள் சீவலப்பேரிச் சின்னச்சாமி ஐயர் என்பார் ஒருவர். அவர், கல்வியிலே சிறக்கவும்,

சிறந்து அரண்மனையிலே அலுவல் பார்க்கவும் நினைந்து, இளமையிலே தம் தாயாருடன் புறப் பட்டு வந்தவர். அப்படியே, அவர் கல்வியிற் சிறந்தார்; கணிதம், தமிழ், தருக்கம் ஆகிய இவைகளிலே நிகர் அற்ற தனிப்பெரும்புலவரா னார்; சீரிய கூரிய அறிவு படைத்தார். பள்ளி களில் படியாமலே, அவருக்கு அக்காலத்தில் ஆங்கிலத்தில் தலைசிறந்த புலமை கைவந்தது. அவரது மதிநுட்பமும் நாவன்மையும் கூடி, அப் போது எட்டைய புரச் சம்ஸ்தானத்திலே புல வர் தலைவராய் வீற்றிருக்கத்தக்க பேற்றினை நல்கின. புதியன தொடங்கும் ஆற்றலும், அதற் கேற்ற அறிவும், அவ்விரண்டும் ஒத்த மனவுர மும் அவரிடம் மிக்கிருந்தன. எட்டையபுரத் திலே ஒரு பெரிய நெசவுப் பொறி வைத்து, அதனை அவர் ஒரு பெரிய 'மான்செஸ்டர்' ஆக்க முயற்சி செய்த செய்தி, அனைவரும் கேட்டறிந் தது.

இப்படி அறிவு ஆற்றல்களிற்சிறந்து நின்ற சின்னச்சாமி ஐயருக்கு மனைவியர் இருவர். மூத்த மனைவியார் பெயர் இலட்சுமி. பெயருக்கு ஏற்ற உரு, அருள் இவற்றோடு கூடியவர் அவர். சின்னச்சாமி ஐயருக்கு அவ்வம்மையாரிடம் பிறந்தவரே நம் வரகவி பாரதியார். நம் பாரதி யார், 1882-ஆம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள், மூல நாளிலே பிறந்தார். அறிவு, ஆற்றல், அருள், திரு முதலிய குணநலங்களாற்சிறந்த பெற்றோ ருக்குப் பிறந்த பாரதியாரின் பண்பினிமை பற் றிப் பேசுவானேன்! 'மகன் அறிவு தந்தை

அறிவு,' என்பது நம் நாட்டுப் பழமொழி. நம் கவிஞரிடமும் அத்தகைய குணநலனுக்கான அடிப்படைகள் யாவும், 'விளையும் பயிர் முளையிலே,' என்னும் உண்மைக்கு இலக்காய் அமைந்திருந்தன. நம் கவிஞர் வளர வளர, அக்குண நலங்களும் போட்டியிட்டுக்கொண்டு, அவரினும் முற்பட்டு வளர்ந்தன. ஆனாலும், தம் மைந்தரின் கிளர்ச்சி பெற்ற வளர்ச்சியைக் கண்டு மகிழும் பேறு, பெற்ற அன்னையாருக்குக் கிட்டவில்லை. நம் கவிஞர் ஐந்தாண்டின் முடிவு எல்லையை அடையுமுன்னரே, அவர் தாயார் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

உலகினர், 'தாயற்ற பிள்ளைக்குத் தகப்பன் பகை,' என்பர். ஆனால், தாயாரை இளமையிலேயே இழந்த நம் கவிஞருக்குத் தந்தையாரே தாயார் நிலையில் இருந்து அவரை வளர்த்தார். இளைய தாயாராகிய வள்ளியம்மையாரும், மிக நேசமாகவே அவரிடம் பாசம் காட்டினர். சின்னச்சாமி ஐயர், தமது மறுமணத்தின் போதே பாரதியாருக்கு அந்தணர் குல நெறிப்படி பூணூற்சடங்கினைச் செய்து வைத்து மகிழ்ந்தனர். நம் கவிஞர், சுப்பையா என்ற செல்வப் பெயரால் வழங்கப்பெற்று வந்தார்.

நம் கவிஞர், உரிய காலத்தே பள்ளிக்கு அனுப்பப்பெற்றனர். ஆங்கிலப் பள்ளியிலே கல்வி கற்கச் சென்றாலும், பாரதியாருக்குக் கலைமகள் அருளால் தமிழிலே ஆர்வம் பிறந்தது. சின்னச்சாமி ஐயரும் அஃதுணர்ந்து, அவருக்குக் கம்பர், தாயுமானவர், திருவள்ளுவர் முதலிய

வர் இயற்றிய நூல்களைத் தாமே பாடம் சொல்லி வைத்து, அவ்வேட்கையை மீதூரப் பண்ணினார். ஆனாலும், அவருக்குத் தம் மைந்தர் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் நிகரற்ற மேதையாகிப் பெரிய அரசாங்க அலுவல் பார்க்கும் நிலைக்கு வருவதிலேயேதான் விருப்பமுண்டாம். எனினும், தமிழன்னை தவம் செய்து பெற்ற புண்ணியப் புதல்வரை அங்ஙனம் ஆக்க அவள் ஒருப்படுவளா? அவள் தன் அழகாற் கவிஞரை மயக்கித் தன்மீது அவரைக் காதல் கொள்ளச் செய்தனள். பிற எவற்றையும் போற்றாது மறக்கச் செய்யும் கலைக்காதல் இளமையிலேயே பாரதியாரைத் தமிழ்வெறி கொள்ளும்படி ஊக்கியது.

'வருவது தானே வரும்,' என்பர். அப்படியே, தமிழ்ப்புலமையும் தானே வந்து பாரதியாரை அடைந்தது. தகப்பனார் கருத்துப்படி ஆங்கிலப் படிப்பிலும், கணிதநூற்புலமையிலும் நம் கவிஞர் மூழ்கிவிடவில்லை. தமிழ்த்தாய் அவரைத் தடுத்தாட்கொண்டாள். தமிழ்க்கடலிலே திளைத்தார் அவர். தெள்ளூற்ற தமிழமுதின் சுவை உண்டு தெவிட்டினார்; தமிழ்த் தாயின் சுடைக்கண் நோக்கிற்கு இலக்கானார். பின்னர்க் கேட்கவேண்டுமா! கவிப் பெருக்குக் கடல்மடை திறந்தாலெனை, அவரிடமிருந்து பொங்கி வழிந்து புறப்பட்டது. ஏழு வயதிலேயே நம் கவிஞர் இளங்கவிஞராய்க் காட்சி வழங்கினார். காரிகை கற்றவர் கவி பாடுவதில்லை. 'புலவர்க்கு வெண்பாப் புலி,' என்று பலர் இன்றும் கூறுவர். வெண்பாப்பாடுதல், புலவர்க்கே அவ்வளவு

பெருந்துன்பம் தருவதாகும். பிறர் கொடுத்த ஈற்றடி கொண்டு, அதற்குத் தகுந்தபடி தம் கருத்தை ஏற்றி, கண்டவர் வியக்கும்படி பல பாடல்களை ஒன்பதாம் ஆண்டளவிலேயே நம் புலவர் பாடிக் காட்டிப் பெருமை பெற்றார்.

இதனோடு தொடர்புடைய ஓர் இளம்பருவ நிகழ்ச்சி, இங்கு மறவாது நினைக்கத் தகும்: காந்திமதி நாதப்பிள்ளை என்பார் ஒரு பெரியார். அப்போது அவர் திருநெல்வேலி இந்து கல்லூரியில் இடைக்கலை மேல் வகுப்பிற் கற்று வந்தார். அவர் புலவர் மரபு வழியிலே பிறந்தவர். அவருக்கு முருகதாச சுவாமிகளிடம் இருந்து வந்த நெருங்கிய பழக்கத்தால், அக்காலத்திலேயே தமிழிலே ஓரளவு நல்ல பயிற்சியும் இருந்து வந்தது. தமிழிலே நல்ல பாடல்கள் பல பாடும் ஆற்றலும் அவருக்கு அப்போது உண்டு.

ஒரு நாள் அவர் கவிஞரின் திறமையை எக்காரணத்தாலோ அளந்தறியக் கருதினர். அவர் கருதிய நினைவு எதுவாயினும், அது நம் கவிஞரது பெருமையை அன்றே நாட்டிநிந்து போற்ற நல்ல வழி செய்தது: "பாரதி சின்னப் பயல்," என்று ஒரு வெண்பா இறுதியடியை அவர் தயாரித்து, அதற்கேற்ற கருத்தை மற்ற அடிகளிலே அமைத்து ஒரு வெண்பாப் பாடும் படி பாரதியாரை வேண்டினார். அதற்கு ஏற்பப் பாட வேண்டுமானால், நம் கவிஞர், தம்மைச் சிறுவனாகக் கருதுவதற்கு உரிய இழி குணங்களை முன்னடிகளிலே சுருக்கிப் பின்பு

பொருத்தமுற இவ்வடியைச் சேர்த்துத்தான் பாடல் முடித்திருக்க வேண்டும் என்றே நாம் கருதுவோம். பாடுமாறு சொல்லிய பிள்ளை அவர்களே, அப்படியே பாடுவார் என்றுதான் கருதியிருக்கக் கூடும்.

ஆனால், பாரதியார் பாடி முடித்தது எப்படித் தெரியுமா? முதல் மூன்று அடிகளிலே பாடச் சொன்ன பிள்ளை அவர்கட்குச் சிறுமை கற்பித்து, இறுதியில் அவர் கொடுத்த அடியிலே உள்ள, 'பாரதி' என்ற சொல்லைப் 'பார்' என்று பிரித்துப் பொருள் கொள்ளுமாறும் அமைத்தார். கடைசியில், அதனைக் காந்திமதி நாதன் என்ற பெயரோடு இணைத்து, "காந்திமதி நாதனைப் பார்; அதி சின்னப் பயல்," என்று பொருள் செய்து காட்டி, யாவரும் வியக்குமாறு அவ்விடத்திலேயே பாடலைப் பாடி முடித்தார். பாடலைக் கேட்டவர் வியந்தது பெரிதன்று; பாடச் சொன்ன பிள்ளை அவர்கள் தலை, தன்னையறியாது வெட்கத்தால் குனிந்திருக்கும் அல்லவா? இத்தகைய பாடல்கள், ஒன்றல்ல-இரண்டல்ல; நூற்றுக்கணக்கிலே பாடிக் குவித்தார் நம் பாரதியார்.

புத்தகமும் கையுமாய் இருக்க விரும்பிய தந்தையாரின் கருத்துக்கு மாறாக, 'கவிதைத் தலைவி' நம் வரகவிஞரை ஆற்றோரங்கட்கும், கோயில் மூலைகட்கும், சோலையிடங்கட்கும் தனிமையிலே இழுத்துக் கொண்டு செல்லுவாள். பள்ளிப் படிப்பிலே மனம் பற்றுமாறு அவரை அவள் விடவில்லை. பல கிழவர்களோடு

சென்று அடிக்கடி அவர்கள் செய்யும் வேதாந்த விசாரணையில் ஈடுபடுவதிலே நம் வரகவிஞருக்குப் பற்றுதல் மிகுதி. அப்படிப் பேசும் நேரங்களில், நம் கவிஞரின் சொல் வன்மையும் ஆழ்ந்த அறிவும் அவர்கட்குப் பன்மடங்கு சிறந்து தோன்றும். வர கவி பாரதியார் பல முறை அரண்மனைக்குச் சென்று அரசரோடு அளவளாவித் தம் கவிதைகளைக் கட்டுவதும் உண்டு. அவற்றைக் கண்டு மெச்சிய மன்னர், "சுப்பையா வரம் பெற்ற கவி! மகா மேதாவி!" என்று வியந்து, அடிக்கடி அவர் தந்தையாரிடம் புகழ்வது உண்டாம். 'என் பாட்டுக்களின் திறத்தால் நான் உலகினை ஆளவேண்டும்,' என்று பிற்காலத்திலே பாரதியார் ஆசை கொண்டு பாடியுள்ளார். ஆனால், இளசைப் பதி மன்னரே இளங்கவிஞர் பாரதியார் பாட்டிற்கு ஆட்பட்ட செய்தியை நாம் இளமை தொட்டே கேட்டறிகிறோம். மன்னர் மெச்சும் புகழ், வரகவிஞர் அல்லாத வேறு யாருக்குக் கிடைக்கும்!

தமிழ் அன்னையின் திருவருளால் வந்து பிறந்த பாரதியாரிடம் அவரது பிற்கால நன்னிலைக்கு ஏற்ற அடிப்படையான அருங்குணங்களும், செயல்களும் சிறந்து நின்றன என்பது நாம் வியத்தற்குரியது அன்று. பெருங் கவிஞர்கள், உலகப் போக்கிலே நில்லாது விலகி நின்று, பிறர் காணாத பல உண்மைகளைக் கண்டு, உலகிற்கு அறிவுறுத்துவார்கள். நம் பாரதி

யாரும், இளம்பருவமுதலே பள்ளியிற்பயிலும் காலங்களிலும் யாரிடமும் அதிகம் கலந்து மகிழ்ந்து உறவாட விரும்புவதில்லை. தனிமையிலே இருந்து அவர் இன்பம் உறுவர். இயற்கைக் காட்சிகள், அவர் மனத்தை இளமையிலேயே திறை கொண்டன. பசி தாகங்களை மறந்து, நெடுநேரம் ஆற்று ஓரங்களிலும், குளக்கரைகளிலும், சோலையிடங்களிலும் அவர் கலந்துறைவது வழக்கம். இப்படி இயற்கையும் செயற்கையும் கூடி, அவரை இளம்பருவமுதலே பெரும்புலவராக்கின. இதனாலேயே தான், பதின் மூன்றும் ஆண்டில் பல புலவர்கள் கூடிய குழுவிலே சென்றிருந்த அவருக்குப் 'பாரதி' என்னும் பட்டம் வழங்கிப் புலவருலகம் அவரைப்போற்றி ஏற்று மகிழ்ந்தது. சுப்பையா, பாரதியாரான கதை இது.

'புலமைக் காய்ச்சல்' என்பது நாட்டிலே என்றும் இருக்கத்தான் செய்யும். ஆயினும், 'பாரதி' என்னும் பட்டம் பெற்ற நம் வரகவிஞரை அக்காலப் புலவருலகம் இளமைகருதி இகழாது, போற்றியது.

அவர் இளமையிலேயே தமிழ்க்கவி இயற்றும் பேறுபெற்று, அதுகாரணமாய்ப் 'பாரதி'ப் பட்டம் பெற்ற செய்தி புலவர் ஒருவருக்கு எட்டியது. உடனே அவர் பொறாமையால் மனம் புழுங்கவில்லை. வீரனுடன் தானும் மோதி, அவன் வலி காண மற்றொரு வீரன் விரும்பி நிற்பது உலகியற்கை. அதில் குறை ஒன்றும் சொல்லுதற்கு இல்லை. அதுபோலவே, புலவன் ஒருவ

னது புலமையைச் சோதித்து அறிவாழம்காண விரும்புவதும் பண்டு தொட்டுப் புலவருலக வழக்கேயாகும்.

அது கருதி, அப்புலவர் பெருமகனார் இளங் கவிஞரிடம் வந்து நின்றார்; "உன்னை எல்லாரும் 'வரகவி-பெருங்கவி' என்றெல்லாம் சொல்லு கின்றனரே! அப்படியானால், நான் சொல்லுகிற முறையில் ஒரு கவி இயற்று; பார்ப்போம்!" என்று கூறி, வாழை, கமுகு இரண்டையும் கூட்டிப் பொதுவாக வருணிக்கும் ஒரு சிலேடைக்கவி பாடுமாறு வேண்டினர். பாரதியார் மறு கணத்திலேயே, அவர் எதிர்பாராத முறையில், யாவரும் வியக்குமாறு பாடி முடித்தார். அதனைக் கேட்ட புலவர் பெரிதும் மகிழ்வுற்று, பாரதிப் பட்டம் பெற்றதற்கு உள்ள அவரது தகுதியைப் பாராட்டி, அவரை வாழ்த்திச் சென்றார். இப்படிப் புலவரும் போற்றும் கவிஞர் திலகமாய்ப் பாரதியார் பதின்மூன்றும் ஆண்டிலேயே சிறந்து விளங்கினர்.

ஆகவே, நாம் காண்பது என்ன? சின்னச் சாமி ஐயர், தம் புதல்வரைப் பள்ளியிற்பயிலும் புள்ளிக் கணக்கிலே புலவராக்க நினைத்து முயன்றார். எனினும், இயற்கைத் தேவி அவரைத் தடுத்தாண்டு, தமிழிலே கவிஞராக்கினள். தமிழர் நாடும் மொழியும் முன்னேற வந்த 'முழு முதல் முளை' அல்லவா அவர்? ஆகையினலேதான் இயற்கையன்னை அவரை விளையும் பயிர் ஆக்க இளமையிலேயே இத்தகைய நல்லுரம் இட்டுச் செம்மைப்படுத்தினள்! நல்லது இயற்றிய அவ்

வியற்கை நீடு வாழ்வதாக!

நம் வரகவிஞரின் அகவாழ்க்கையை இயற்கைத்தேவி தான் கருதியபடியே உருவாக்கினாள். சின்னச்சாமி ஐயரோ, தாம் பெற்ற கடமையை நினைந்து, தமது கருத்துப்படி அவரது புறவாழ்க்கையை உருப்படுத்தும் வேலையினின்று என்றும் தவறவில்லை. பாரதியாருக்கு வயது பதினான்கு ஆயிற்று. மணவினை நிகழ்ச்சியைக் கவிஞருக்கு அவர் நிறைவேற்றி வைத்துவிட்டார். கீழ்க்கடையம் செல்லப்பா ஐயரின் புதல்வியாராகிய திருமதி செல்லம்மாள், நம் கவிஞரின் வாழ்க்கைத் துணைவியராய் வாய்த்தார்.

பெற்றும், வளர்த்தும், வித்தைதனைப் பேணிக் கொடுத்தும் காத்து வந்த மைந்தருக்கு மணம் முடித்ததுடன் தமது கடமை தீர்ந்தது என்று கருதிப் புறப்பட்டவர்போல - மற்றவற்றையும் இருந்து காணாது மறு ஆண்டிலேயே நம் கவிஞரின் தந்தையார் காலமானார். 'பிறந்தவர் மாய்வர்,' என்பது உறுதி அல்லவா?

'தாயோடு அறுசுவை போம்; தந்தையொடு கல்வி போம்,' என்பது நம் நாட்டுப் பழம்பாடல். நம் வரகவியின் தந்தையார் போனார். ஆனால், அவரோடு மைந்தரது கல்வி போய்விடவில்லை. பாரதியாரைப் பண்படுத்திய உண்மைக் கல்வி, இனித்தான் அவருக்கு வர இருந்தது. அதனையும், தீர நினைத்தால், 'அக்கல்வி தானே இவரை அடைந்து பெருமை படைத்தது,' என்றுதான் கூறவேண்டும். பாரதியார் பயின்றது பள்ளிக் கல்வி அன்று; கல்லாக் கல்வி. கல்வி கற்றுக் கவி பாடின பிற்காலப் புலவர் வரிசையைச் சேர்ந்தவரும் அல்லர் நம் கவிஞர்.

நினைத்ததைத் தர வல்லது தெய்வமணி. அஃது, இமையவர் உலகத்திலே இருத்தற்கு உரியது; நிலை தவறிக் காட்டிலே எளிதில் வந்துற்றது. அதனைக் கண்ட நாரைக்கு அதன் பெருமை எப்படி விளங்கும்? நாரை அதை எடுத்துக் கூட்டிலே வைத்தது, இருளோட்ட உதவும் என்று கருதி! இப்படிப் பல நிகழ்ச்சிகள் நிகழ்வது உலகிலே இயற்கை. தன் கையில் கிட்டியதைத் தான் கருதியவாறே செய்வது தன் உரிமையும் கடமையுமாகும் என்று மனிதன் நினைக்கிறான். நம் கவிஞரின் தகப்பனாரும் இதற்கு விலக்கு அல்லர்.

பாரதியார் ஒரு தெய்வப் புலவர்; தமிழ் செய்த தவத்தால் வந்து பிறந்த ஒரு புலவர்மணி. தகப்பனார் பள்ளியில்வைக்க முயலும் முன்னரே, கலைமகள் அருட்பார்வை தானே கிட்டிற்று அவருக்கு! இளமையிலேயே பிள்ளைக் கவி ஆனார்; புலவர் பலர் மெச்சப் புலமை தாங்கினார். இவை யாவும், அவரது இளம்பருவப் பெருமைகளாக நாம் அறிந்தவை. இவ்வளவும் சின்னச்சாமி ஐயருக்குத் தெரியாமல் இல்லை. எல்லாவற்றை

யும் கண்டு போற்றினர்; எனினும், புதல்வருக்குக் கல்வி பயிற்றும் பொறுப்புத் தம்மைச் சார்ந்தது என்றே மயங்கிக் கருதினர்; ஆரம்பப் பள்ளியில் நம் கவிஞரைக் கொண்டுபோய் விட்டார்.

அக்காலத்திலே, தமிழைச் சிறப்புறக் கற்கத் தனித் தமிழ்ப் பள்ளிகள் இல்லை. ஆகவே, அவர் தமிழ் நூல்களை எல்லாம் சிறந்த முறையில் தம் தகப்பனரிடமே பாடம் கேட்டார். பள்ளிப் பாடங்களிலே நம் பாரதியாருக்குப் பற்றுதல் இல்லை. இப்படி அடிப்படைக் கல்வி பயிலும் காலத்திலேயே அவர் தமிழில் வேட்கை மீதூரப் பெற்று, அண்ணுமலை ரெட்டியார் காவடிச் சிந்து முழுதும் பாடம் பண்ணி இருந்தது உண்டாம்! மற்றப் படிப்பிலும் பாடங்களிலும் அவருக்கு மறதி மிகுதி. திண்ணையில் இருந்து படித்துக்கொண்டிருக்கும் போதே அவருக்குச் சில கவிக் கனவுகள் தோன்றிவிடும். புத்தகங்கள் வாயிலிலே கிடக்கும். அவர் உள்ளே வந்துவிடுவார். பின்பு யாரேனும் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாற்றன் அப்புத்தகங்கட்கும் அவருக்கும் நட்பு ஏற்படும்.

கீழ் வகுப்புக்களிற்படிக்கும் காலங்களிலும் பாரதியார் குழந்தைகளோடு சேர்ந்து பழகவும் விளையாடவும் மாட்டார். தேகப்பயிற்சியில் அவருக்கு விருப்பம் இருந்ததில்லை. இளமை தொடங்கியே, இராமாயணம் பாரதம் முதலிய சீரிய கதைகள் கேட்பதிலே அவருக்கு ஆர்வம் மிகுதியாம். தகப்பனர் மிகவும் கடுமையானவர். அவர், பாரதியாரது படிப்பிலே மிக்க அக்கறை செலுத்

திக் கண்காணித்து வந்தார்: அடிக்கடி கணக்குப் போடத் தம் புதல்வரை அழைப்பார். அவர் கணக்குப் போடச் சொன்னால், நம் கவிஞர் மனம் கவிதை புனைவதிலேயே செல்லும். 'கணக்கு, பிணக்கு, வணக்கு, மணக்கு, ஆமணக்கு' என்று, சந்த இனிமை நோக்கி அவர் சொற்களை அடுக்கிக்கொண்டேயிருப்பர். ஒரு சமயம், போட்ட கணக்கிற்கு விடை காண இயலாமல், கவிஞர் விழித்துக்கொண்டிருந்தார். 'என்னடா விழிப்பு!' என்று தகப்பனார் சினக்க, "விழி-பழி-குழி-வழி-பிழி" என்று அடுக்கிக் கணக்கிலேயும் சுழி போட்டுவிட்டாராம்! கவிஞரது கவிதைக் காதலைக் கண்டறியாத சின்னச்சாமி ஐயருக்கு "அறிவு மாறுபாடோ என்னவோ புதல்வனுக்கு!" என்று கூடப் பயம் இருந்ததாம்!

தம் புதல்வர் கணிதத்திலும் மொழியறிவிலும் சிறந்து உயர்ந்த அரசாங்க அலுவல்பார்க்க வேண்டும் என்ற ஆவல் தந்தையாருக்கு இருந்தது. அதனால், எப்பொழுதும் தம் மைந்தரைப் புத்தகமும் கையுமாகவே இருக்க அவர் பணித்தார். தமது ஆணை தவறித் தனயர் கவி பாடுவதிலே ஓரளவு வெறுப்பும் அக்காலங்களில் அவருக்கு இருந்து வந்தது. எனினும், அவர் ஆவலின் பிற்பகுதி நிறைவேறவில்லை. மொழியிலும் கணிதத்திலும் நம் கவிஞர், தந்தையார் விரும்பியபடியே தேர்ச்சி அடைந்தார். என்றாலும், படித்த படிப்பினால் பாரதியாருக்கு ஒன்றும் பயனில்லை. பாரதியார் அன்று

படித்த பள்ளிக்கு இன்று அவரால் பெயரும் புகழும் ஒருவேளை ஏறியிருக்கலாம்! இவ்வளவு தான், அவருக்கும் அப்பள்ளிக்கும் உள்ள தொடர்பு! இதனோடு அவரது ஆரம்பக்கல்வி யின் கதை முடிந்தது. தந்தையார் சின்னச்சாமி ஐயரின் வாழ்நாளும் முடிந்தது.

பாரதியாரின் அத்தையாரான குப்பம்மாள் காசி வாசி. அவருக்குப் பாரதியாரிடம் பாசம் மிகுதி. தந்தையார் இறந்த பின், பாரதியாரை இந்து கல்லூரியில் சேரும்படி செய்து மேற் படிப்புக்கும் வழி செய்தவர் அவரே. ஆகவே, நம் கவிஞருக்கு உலகியற்கைப்படி தந்தையொடு கல்வி போய்விடவில்லை. கல்விப் பாதையிலே— மற்றுமொரு தங்கும் இடத்திலே—அவரை அத் தையார் கொண்டு போய் நிறுத்தினர். ஆனு லும், பயன் என்ன கிட்டியது? ஆரம்பக்கல்வி சென்ற அடிச் சுவட்டினைப் பின்பற்றித்தான் இந்டுத்தரக் கல்வியும் சென்றது. தமிழ்க் கன லும் கவிதை வெறியும் கவிஞரிடம் மேலும் மேலும் கொழுந்து விட்டு எரிந்து படர்ந்தன. பிறதுறைப் படிப்பிலே ஒரு வெறுப்புக் கண்டது தான், இந்து கல்லூரியில் அவர் பெற்ற படிப்பு. அவர், இங்குக் கற்ற கல்விக்குப் பிற்காலத்திலே 'பேடிக்கல்வி, அடிமைக்கல்வி' என்றெல்லாம் பட்டம் சூட்டியிருப்பதைப் பார்க்கும் போது, அக்கல்லூரியில் வேறு என்ன அவர் கற்றிருக்க முடியும் என்று நினைக்கத்தான் நமக்குத் தோன் றுகிறது! அங்கு அவர் கற்றது ஒன்றுமே இல்லை. நிழலின் அருமையை வெயிலில் நிறுத்தி உணர்த்

துவது போல, ஆங்கிலக் கல்லூரி வெம்மையிலே அவரை நிறுத்தித் தமிழன்னை தன தருமையைப் பன்மடங்கு அவரிடம் பதியுமாறு செய்யமுயன்ற சூழ்ச்சியே இது என்று நாம் துணிந்து கூறி விடலாம்.

தமிழ் ஒழிந்த மற்றைய பாடங்களைப் படிக்கும் போதெல்லாம், அன்னையைப் பிரிந்த சேயின் ஆற்ருமைதான் அவருக்குத் தோற்றிற்று. அவ்வமயங்களில் எல்லாம் தமிழின் பிரிவால் தளர்ந்து, "அருமை மிக்க என் மயிலைப் பிரிந்தேனே!" என்று கதறி அழுதார். அவருக்கு அந்த அளவிலே தமிழன்பினை மேலும் வலியூன்றச் செய்த இந்து கல்லூரிக்கு நாம் நன்றி தெரிவித்தல் தகும். ஆனால், அவர், 'அங்குப் படித்து நான் எட்டுணையும் நலம் காணவில்லை ; செலவு தந்தையாருக்கு ஆயிரம் சென்றதுதான் கண்ட பலன்,' என்று பிற்காலத்தில் சொல்லிச் சென்றிருக்கிருர்.

இந்து கல்லூரியில் படிக்கும் நேரத்திலேயே, நம் கவிஞர் பல துறைப் படிப்புக்களையும் பற்றிய உண்மைகளை நன்கு உணர்ந்தார். "கணிதம் பன்னிரண்டாண்டு நம்மவர் பயிலுகின்றனர்; பின்னும் வான்மீனின் நிலை அறியும் தகுதி பெற்றிலரே!" என்று வருந்தினர். செயலிற் பயனில்லாத ஆயிரம் சாத்திரங்களை நம்மவர் வருந்திக்கற்பது, அவருக்குப் பிடிக்கவில்லை. "பள்ளிகளிலே நம் நாட்டுக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு நமக்குச் சிவாஜியின் வெற்றி--பாணினியின் இலக்கண அறிவு—சங்கரரின் ஏற்றம்—கம்பரின் கவித்திறம்—இளங்கோ வாழ்வு — வள்ளுவர்

தெய்வமிலை—என்னும் இன்னோரன்ன சிறப்புக்களை வலியுறுத்த வேண்டாவா?" என்று வருந்தினார். அப்படி இல்லாத இப்பித்தரின் 'அடிமைக் கல்வி' தமக்கு வேண்டா என்பது மட்டுமன்றி, நம் நாட்டிற்கே வேண்டுவதில்லை என்று அன்றே அவர் முடிவு செய்தார்; இப்படிப்புக்கு அனுப்பிய தம் தந்தையார் அத்தையார் முதலியவரைக் குறித்து நினைந்து நைந்து, அவர்தம் அறியாமைக்குப் பெரிதும் இரங்கினார். "அன்னியக் கல்வியாகிய படுகுழியிலே, சூதும் பொய்யுமாகிய விலங்கினங்கள் வாழும் கொடுங்குகையிலே, கபடமற்ற என் தந்தையார் எனக்கு நலம் செய்ய நினைத்துக் கட்டிளமையிலே என்னைக் கொண்டு போய்த் தள்ளினார்," என்றுதான் அவர் பிற்காலத்தில் தம் தந்தையார் செயல் குறித்து நன்றி செலுத்தியிருக்கிறார்!

நம் கவிஞர் எப்பொழுதும் இனிக்கப் பேசும் இயல்பினர். அவர் பேச்சுக்களிலே நகைச்சுவை குலுங்கும். கேட்டாரைப் பிணிக்கும் அவரது சொல் வளம்: அவரது பேச்சுத்திறம் எதிரிகளையும் முறியடித்து வாயடங்குமாறு செய்யும். இவை எல்லாவற்றையும் போட்டியிட்டு வென்று நிற்கும், அவரது உரையாடல்களின் வாத வன்மை. கலையறிவுப் பெருமைகள் எல்லாம் ஒருவன் சொல்லாலே தோன்றும் என்பர். நம் கவிஞரின் சொல் திறமை குறித்துக்கலையறிவின் திறத்தினைக் கணித்தல் வேண்டுமாயின், 'அவர் கல்லாத கலைகள் இங்கு இல்லை,' என்று சொல்லுமாறுதான் அது துலங்கிற்று. இங்ஙனம்

புலவரும் போற்றும் சொல்லின் செல்வராகிய நம் கவிஞரைப் பொழுதெல்லாம் சூழ்ந்து நின்று மாணவ நண்பர் பலர் தமிழ்ச் சுவை உணர்ந்தனர். அவரும், தம்மை விரும்பி வரும் மற்றவர்கட்குப் பாடல்பல பாடிக் காட்டியும், சுவைபடப் பல பேசியும் மகிழ்வூட்டி, தமிழ்ச்சுவையைப் பிறரறியச் செய்து வந்தார். இங்ஙனம் எல்லாப் படியாலும் சிறந்து நின்ற பாரதியாரைப் புலமையிலே தங்கள் தமிழாசிரியரினும் மேலானவர் என்றுதான் அவர் கால மாணவர்கள் கருதியிருக்கக் கூடும்! மாணவருலக இயல்பு அப்படிப் பட்டது. நம் கவிஞர் கல்லூரியில் இப்படியே பாடிப் பொழுதுகழித்தாரே ஒழியக் காலை மாலை வகுப்பிற்குச் சென்று படித்துப் பயன் அடைந்தார் இல்லை. இது கருதி அவரது திறமையை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. எல்லாத் தேர்வுகளிலும் முதல் வெற்றி நம் கவிஞரே பெற்று வந்தார்.

வரகவிஞரிடம் அமைந்திருந்த இவ்வுயர் குண இயல்புகளை எல்லாம் இன்று நாம் பாராட்டும் மனநிலை பெற்றிருக்கிறோம். ஆனால், அவர் காலத்திலே தமிழாசிரியராய் அமர்ந்திருந்த புலவருக்கு அது பெரிதும் பிடிக்கவில்லை. காரணம், 'புலமைக்காய்ச்சல்' என்பர் சிலர். அது உண்மை அன்று. உண்மைத்தமிழறிவு எவரையும் அது கொள்ள விடாது. பாரதியாரின் வித்தகப் புலமையை ஆசிரியராகிய அவர், மெச்ச அறியாதவரும் அல்லர். எனினும், "பள்ளிக்குப் படிக்க வரும் மாணவர் படிக்கும் பாடங்களிலே நல்ல

பயிற்சி எய்திப் பெயர் சிறக்க வேண்டும்," என்பதுதான் அவர் நினைவு. நல்லாசிரியர்கள் அப்படிக் கருதுவதில் தவறு ஒன்றும் இருக்க முடியாது. அதனை, அவரிடம் பண்டிதர் வற்புறுத்தக் கருதினர். நம்கவிஞர் ஒருநாள் 'காலரி'யில் உயர்ந்த இடத்திலே மிடுக்காய் அமர்ந்திருந்தார். புலவர் முதல் நாள் நடந்தேறின பாடலை ஒப்புவிக்குமாறு கேட்டார். பாரதியாரிடமிருந்து பதிலே இல்லை. பள்ளிப் பாடம் அவர் படித்திருந்தால்தானே!

புலவருக்குச் சினம் பொங்கிற்று. அவர், சுருக்கென்று மனத்திலே தைக்கும்படி, "ஐயா, நீர் மேகம் போலக் கவி மழை பொழிவதாகப் புகழப்படுகிறீர்! அதை ஒத்து இன்று நேராக உயர்ந்த இடத்திலும் நிற்கின்றீர். சொந்தமாகப் பாடுவது இருக்கட்டும். படித்த பாடல்களை ஒப்புவிக்கத் தயங்குவது ஏன்? காளமேகம் போலக் கேட்ட கேள்விக்கு விடைகளைப் பொழிந்துவிடுவதுதானே!" என்று கேட்டார். இவ்வார்த்தைகள், கவிஞர் மனத்தே சூடேற்றின. கவிஞர் மறு விநாடியிலேயே—திறந்த வாய் மூடும் முன்னமே—புலவருக்கு மறுமொழி தந்தார்: "புலவரும் ஆசிரியருமாயுள்ள உங்கட்கு மேகத்தின் பொதுத் தன்மைகூட அறிய முடியாமல் இருக்கிறதே! காளமேகம், தன் இயல்பால் மழை பொழிவது தவிர, பிறர் இச்சைப்படி பணிந்து பொழியுமா? புலவர் ஆணைக்கு அஞ்சி மழை பொழிவது புயலின் இயல்பன்றே! இதனை அறியாது ஆணை

யிட்டுப் பாடல் வருவிக்க நினைக்கும் புலவரிடம் பரிவு காட்டுவது எப்படி?" என்று கவிஞர் வினவினார். உடனே, மாணவர் மனநிலையைப் பற்றிக் கேட்பானேன்! யாவரும் கைகொட்டி நகைத்தனர். புலவர் வெட்கம் அடைந்தார். இப்படிப் புலவர் தமிழைப் பாரதியார் தமிழ் அன்றே வென்றது! இதனால், நம் பாரதியாருக்கும் புலவருக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டுவிடவில்லை, அதற்கு நேர் மாறாகப் புலவர், பின்னரும் பாரதியாரிடம் நேசம் மிக்கவரானார். அடிக்கடி ஆசிரியரும் மாணவரும் நேச முறையிலே கலந்து, நெல்லையப்பக் கவிராயர் வீட்டிலே நிகழும் புலவர் கூட்டங்களிலே சென்று, பங்கெடுத்துக்கொள்வது உண்டாம்.

மாணவர்களைத் தம் கருத்துப்படி திருத்த முற்படுவது ஆசிரியர்களது இயல்பு. அது போலவே, மனம்புண்படும்படி ஆசிரியர்கள் பேசி விடும்போது, முன் பின் கருத்தின்றி முறையற்றுப் பேசித் தன்மானம்காத்ததாகக் கருதி மகிழ்வதும் மாணவருலக இயல்பு. இதுகொண்டு, ஆசிரியரது அன்பின்மை மாணவர்களது அடக்கமின்மை என்னும் குறை காணல் ஆகாது. ஆனால், இதிலிருந்து இளம்பருவத்திலேயே நம் கவிஞரிடம் அமைந்த நெஞ்சு நேர்மை, பேச்சு வன்மை, எதிரி வாயடக்கும் சதுரப்பாடு ஆகிய பண்புகள் கண்டு, நாம் பாராட்டப் பழகவேண்டும். இக்குணநலங்களே பின்னர் அவரிடம் நன்கு முறுகி வளர்ந்து, நாம் இன்று போற்றும் அளவிற்கு அவரை உயர்த்திக்காட்டின.

நெல்லை இந்து கல்லூரியில் பாரதியார் படித்த படிப்பிலே, அவர்தம் அத்தையாரான குப்பம்மாளுக்கு உறுதி இல்லை. தம்மோடு பாரதியாரை அழைத்துக்கொண்டு போய்க் காசியிலே படிக்க வைக்க அவ்வம்மையார் விரும்பினார். அதற்கிணங்க நம் கவிஞர், 1898-ஆம் ஆண்டில் காசியை அடைந்தார். அக்காலத்தில் காசியிலே தனிப்பல்கலைக் கழகம் இருந்ததில்லை; அங்குள்ள மத்திய இந்து கல்லூரியைச் சார்ந்த ஓர் உயர்தரக் கலாசாலையிலே சேர்ந்து தான் கல்கத்தாப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுக்குப் பாரதியார் படித்தார். அங்கு நுழைவுத்தேர்விற்கு வரும் மாணவர்கள் இரண்டு மொழிகளைப் படிக்க வேண்டும் என்னும் நியதி இருந்தது. காசியிலே தமிழ் படிக்க முடியாது. ஆகவே, இந்திமொழியை விருப்பப்பாடங்களுள் ஒன்றாக எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அவருக்கு வாய்த்தது. வடமொழியிலும் கூடுமான வரை நல்லபுலமை ஏற்படும் வசதியும் அவருக்கு ஏற்பட்டது. பாரதியார் இந்தி பேசும் வகையினைக் கண்ட யாவரும், வடநாட்டவர் என்றே அவரைக்கருதி மயங்குவது உண்டாம். பேச்சு மட்டுமா! நடையுடை பாவனைகளும் அப்படியே தான் அன்று காட்சி அளித்தன.

காசியில் வந்தும், தமிழ்த்தாயினை அவரால் மறக்க முடியவில்லை. எப்படி மறக்க இயலும்! தமிழை வளம்படுத்த வந்த தவப்புதல்வரை அவள் வளம்படுத்திய வகைதானே இந்தப் படிப்புக்கள் யாவும்! ' ஒரேமொழியில்மட்டும் புலமை

அடைவது, பறவை ஒரு சிறகாற்பறக்க முயலு வது போலாகும்,' என்று அறிவுடையவர் கூறு வர். ஒவ்வொரு மொழியாளருக்கும் தாய் மொழிப் புலமை இன்றியமையாதது. அதனோடு அமைந்துவிடாமல், கூட்டு மொழியாலாகும் கொற்றமும், வேண்டற்பாலது. எனவே, நம் கவிஞருக்குத் துணைமொழிகளிலே தேர்ச்சி அளிக் கும் நோக்குடனேயே, தமிழன்னை அவரைக்கா சிக்கு அனுப்பிவைத்தாள் என்றுதான் நாம் கருத முடியும். அங்கும் சட்டதிட்டங்கட்கு இணங் கிய நிலையிலே அவர் பள்ளி சென்று ஒன்றும் பயின்றுவிடவில்லை. அவர் காலையில் கல்லூரி சென்றால், மாலை கங்கைக்கரைக்குப் போவார். புத்தகங்களைக் கையில் தொடுவதே அருமை. பள்ளிக்கூடம் சென்றாலும், அங்குள்ள ஆசிரி யர்கள்மீது பாடல்கள் புனைவதுதான் வழக்கம். ஆனாலும், இரண்டாண்டளவிலே இந்தியும் வட மொழியும் நன்கு கற்று, நுழைவுத் தேர்வில் முதல்வராய்த் தேறினார்; பின்பு, இடைக்கலை முதல்வகுப்பிலும் சேர்ந்து, ஓராண்டு படித்தார். அவ்வளவுதான்! காசிப் படிப்பும் முடிந்தது!

படிப்பு முடிந்தாலும், அவரது வாழ்க்கை யைத் தேசீய வழியில் செலுத்துவதற்கான அடிப்படையில் அவரது காசிவாசம் சிறிது உரு வாக்கிவிட்டது. அவரது காளைப் பருவம் காசி யிலேயே கழிந்தது. அழகிய சட்டை, கிராப்பு, முண்டாசுக் கட்டு, மீசை இவற்றோடு இயைந்த நடை உடை மாறுதல் அவரிடம் ஏற்பட்டது. திலகர் பெருமானது தேசாவேசக் குமுறுத

லின் எதிரொலி நம் கவிஞரின் உள்ளத்திலும் ஒலித்தது. அவர் பத்திரிகைகளைப் படித்து, நாட்டு நிலையை நன்கு உணர்ந்தார்; நாட்டுத் தொண்டும் தமக்கு உற்றது ஒரு நல்ல பணி என்று கண்டுகொண்டார். இப்புதிய சூழ்நிலை, நம் கவிஞரைப் பிற்காலத்தில் தேசியக்கவிஞர் ஆக்கித்தரப் பெரிதும் உதவிற்று என்னலாம். மொழிப்புலமையும் நாட்டுப் பற்றும் நெருங்கிய இயைபு உடையனவாகும். கவிச்சக்கரவர்த்தியாரான கம்பர் நாட்டுப்பற்றில் நனிமிகச் சிறந்தவர் அல்லவா?

எனினும், தமிழிலே புலவராகிய நம் பாரதியாருக்கு வடமொழியறிவும் இந்தி மொழித் தேர்ச்சியும் கலைமகள் அருளாற்கிட்டின. இளமையிலே கவிக் காதல் கொண்ட நம் கவிஞர், அக்காதலால் தமிழ்த் தலைவியுடன் கூடிமகிழ்ந்து மேம்பட்ட செய்திகளே, இதனாலும் நமக்குத் தெரிய வருகின்றன. ஆகவே, தமிழைப் பற்றிய கிளர்ச்சியும் முயற்சியுமே இதுவரை அவரது வாழ்க்கையில் ஊடுருவி நின்று வருவதைக் கண்டோம். அது கண்ட நாம், அதன் வலிமை எப்படி அவர் தொழிற்றிறங்களையும் பண்படுத்தித் தன்பாற்பணியச் செய்தது என்பதையும் அடுத்துக் காண்போம்.

சேர்ந்திருக்கும் காலங்களில் பல வகையாலும் இன்பம் தந்து நிற்றல்—பிரியும் காலங்களில் அவ்வின்பம் நழுவிவிட்டதே என்று ஒருவர் வருந்துமாறு பிரிதல்—இவ்விரண்டும் புலவர்களது தொழில் என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளார். இது மிகவும் சுவை மிக்க ஓர் அனுபவம். புலவர்களை ஆதரித்த பல தமிழரசர்கள், அவர்களைப் பிரிய மனமில்லாது சிறிது காலம் பரிசில் கொடாமலே காலந்தாழ்த்துவதும் உண்டு. சங்கநூல்களிற் பல சான்றுகள் இதற்குக் காணலாம். நம் கவிஞரைப் பிரிந்த இளசை மன்னர் நிலையும் அப்படியே ஆயிற்று!

காசியிலே சென்று படித்ததாற் பாரதியாருக்குப் படிப்பு வந்ததோ, இல்லையோ தெரியாது. ஆனால், எட்டையபுரம் அரசருக்கு அவரைப் பிரிந்ததனால் ஆகிய 'ஆற்றுமைத்துன்பம்' முறுகி வளர்ந்ததை நாம் அறிவோம். எப்படியும் அவரை மீண்டும் அடைய மன்னர் பலமுயற்சிகள் செய்தார்; பலமுறை அவருக்குக் கடிதங்களும் எழுதினார். கவிஞரைப் பிரிந்து வாழும் வாழ்க்கை சுவையில் வாழ்க்கை என்பது

அவருக்குப்பட்டது. பாரதியாரோ, தென்னாடு வருவதாக இல்லை. அப்போது அவருக்கு வட நாட்டிலேயே தங்கிவிடும் எண்ணம் இருந்ததும் உண்டு. இங்கிலேயிலே, மன்னர் டில்லி தர்பாருக்குச் சென்று வர வேண்டி நேர்ந்தது. அப்போது, 'காசி சென்று நேரிற்கண்டு கவிஞரை அழைத்து வரலாம்,' என்ற துணிவும் ஆசையும் மன்னரிடம் வேரூன்றின.

தர்பாருக்குச் சென்றிருந்த எட்டைய புர மன்னர், டில்லியிலிருந்து திரும்பும் போது காசி வந்தார்; அங்குச் சிவமடத்தில் தங்கி, நம் கவிஞரைச் சந்தித்து, மீட்டும் எட்டையபுரம் வருமாறு அழைத்தார். பாரதியாருக்கோ, அடிமை வாழ்வில் பிடிப்பில்லை. கை கட்டிச் சேவகம் புரிவது அவருக்கு விருப்பம் தருமா? தரவே மாட்டாது! எப்படியும் அழைத்துப் போகக் கருதி வந்த மன்னர், கவிஞருக்கு முழு விடுதலை தருவதாகவும், அவரது குடும்பப் பொறுப்பு முழுவதையும் தாம் ஏற்பதாகவும் கூறினர்; கூட இருந்து அளவளாவுதலே போதுமானது என்றும் சொல்லி ஆர்வத்துடன் மீட்டும் பாரதியாரை வர வேண்டினர். பாரதியாரும் அவரது அன்பிற்குப் பணிந்து வர இசைந்து, புறப்பட்டு வந்தார். அவர் காசியிலிருந்து எட்டையபுரம் மீண்டு அரண்மனை அலுவல் பார்த்த காலம், 1902-ஆம் ஆண்டு என்பர். காசியிலிருந்து திரும்பின போதுதான் அவர் தம் மனைவியாரோடு கூடி இல்லற வாழ்க்கை நடத்தும் பக்குவத்தையும் பெற்றார்; குடும்பத்தை நடத்தும்

பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது.

பாரதியார் எட்டைய புரத்திற்கு மீண்டும் வந்ததால் மன்னருக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அவைக்களப் புலவருள் தலைவராக அவரை மன்னர் அமர்த்தினார்; நல்ல ஆதரவும் தந்து வந்தார்; தாம் செல்லும் இடங்கட்கு எல்லாம், அவரையும் உடன் அழைத்துச் செல்வார். பாரதியாருடன் அளவளாவுதலிலே உள்ள இன்பம் மன்னருக்கு வேறு எதிலும் உண்டாவதில்லை. ஊரில் உள்ள நேரங்களில் மன்னருக்குச் செய்தித் தாள்களைப் படித்துக் காட்டி, விரிவுரை நிகழ்த்திக்கொண்டிருப்பார் பாரதியார். தமிழ் ஆங்கில நூல்களைப் படித்து மன்னருக்குக் கருத்துரைப்பதிலே சிறிது நேரம் கழியும். பாடல்களை இயற்றிக் காட்டி, பல முறை மகிழ்விப்பதும் உண்டு. மன்னர் நம் கவிஞருடன் தமிழாராய்ச்சியும் வேதாந்த விசாரணையும் நடத்தி வருவார் என்பதும் தெரிகிறது. அக்காலங்களில் எல்லாம், நம் கவிஞர் ஷெல்லிதாஸன் என்ற புனைபெயருடன் பல ஆங்கிலக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டு வந்தார். இவ்வளவுதான் நம் கவிஞருக்கு அரண்மனையிலே அப்பொழுது அலுவல். இப்படி அவருக்கு வாய்த்த தொழிலும், நாள் முழுதும் கலையிலே பொழுதுகழியும்படியானதாய் இருந்தது. எந்தத் தொழில் செய்தாலும், அதிலே கலையுணர்வு கண்டு மகிழ்பவர் நம் கவிஞர். அவருக்கு இவ்வாறு எல்லாம் உள்ள கலைப்பணியில் தலைநின்ற இன்பமே கிடைத்திருக்கும். மன்னரும், வாக்

களித்தபடியே, அன்போடும் ஆதரவோடும் கவி ஞரை ஆதரித்து வந்தார். போஜனும் காளிதா சனும் போல மன்னரும் கவிஞரும் சேர்ந்து களித்து வந்தனர். "கல்வி அறிவுள்ள இருவர் கூடி, உள்ளம் கலந்து பேசிமகிழும் மகிழ்ச்சியிற் சிறந்த இன்பம் வீட்டுலகத்திலும் இல்லை," என்று ஒரு கவிஞர் சொன்னார். அத்தகைய சிறந்த இன்பத்தை நம் புவி மன்னரும் கவி மன் னரும் ஒருங்கே எய்திச் சிறந்து நின்றனர். இஃது அல்லவா சீரிய கலை வாழ்வு! அருங்கலை விநோதராகிய மன்னர் ஆதரவு பெற்றுக் கலைத் துறையிலே நுழைந்து தமிழ்ப்பணி புரிவதிலும் உயர்ந்த இன்பம் வேறு எங்கு உண்டு? "இருந் தமிழே, உன்னால் இருந்தேன்! இமையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்!" என்று பண்டைப் புலவரை வாயாரச் சொல்லச் செய்தது இவ்வின்பமே அல்லவா? கவிஞரும் மிக்க மனநிறைவோடுதான் அக்காலங்களில் இவ்வலுவலை மேற்கொண்டு நடத்தியிருக்க வேண்டும்.

ஒரு நாள் மன்னரும் பிற புலவர்களும் கூடியிருந்தகூட்டத்திலே, காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. எல்லாரும், ரெட்டியாரை மிகப் புகழ்ந்து பாராட்டினர். நம் கவிஞரும் அக் கூட்டத்திலே இருந்தார். புலவருள் ஒருவர், "சிந்து பாடுவதில் ரெட்டியாருடன் போட்டி யிடக் கூடியவர் ஒருவருமே இல்லை," என்று கூறினார். அவர் அப்படிக் கூறியதை, நம்

கவிஞர் தம்மையே அறை கூவி அழைப்பது போல நினைத்துக்கொண்டார். அவருக்குப் பொறுக்க முடியவில்லை. உடனே, அவர் இகழ்ச்சிக் குறிப்புப் புலப்படும்படி சிரித்தார். அண்மையில் இருந்த ஒருவர், "நீங்கள் இகழ்ந்து நகைப்பதிற்பயனில்லை. இயலுமாளுல், நாளை நீங்களும் அவ்வாறு சிந்து ஒன்று இயற்றி வாருங்கள்; பார்க்கலாம்!" என்று கூறினர். மாலைக்குள் பாடி வருவதாகச் சொல்லி விடை பெற்றுச் சென்றார், நம் பாரதியார். சொன்ன மாலை நேரம் வரவில்லை; சிந்து வந்துவிட்டது. உடனே அரண்மனை சென்றார். எவரும் அங்கில்லை. 'பாரதியால் இது எங்கே முடியப் போகிறது!' என்று எண்ணி, அவர்கள் எல்லாரும் வீடு போய்விட்டார்கள்.

ஆனுல், தாம் பாடிவந்த பாடலை நம் கவிஞர் அரசர் முன் நீட்டினர். உடனே, ஆளனுப்பிப் புலவர்யாவரும் அழைக்கப்பட்டனர். புலவர்கள், "பாரதியார் சொன்னதை விளையாட்டுப் பேச்சு எனவே நினைத்தோம்! மேலும், குறைந்தது பத்து நாளாவது இல்லாமல் எவராலும் எந்த நூலும் செய்ய முடியாது என்ற கருத்தாலே தான், நாங்கள் திரும்பி வரவில்லை," என்று சொல்லி, பாரதியாரது சிந்து நூலை மிக்க ஆர்வத்துடனும் வியப்புடனும் கேட்டு வந்தார்கள். கேட்டவர் எல்லாரும் ஒரே மனமாக, ரெட்டியாரின் சிந்துக்குப் பாரதியாரின் சிந்து எந்த விதத்திலும் இளைத்ததன்று!" என்ற முடிவுக்கு வந்தனர். சிலர், "ரெட்டியார் சிந்து, பாமரர்

பாட்டு; பாரதியார் சிந்தோ, புலவரும் மெச்சும் புதுமைச் சிந்து!" என்று உயர்த்திப் பேசியும் மகிழ்ந்தனர். இப்படி நம் கவிஞர் புலவர் குழுவிலே எழுந்த போட்டி காரணமாகப் பாடிய பாடல்களுக்கு அளவே இல்லை. 'பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி,' என்பது அன்றே நம் நாடு கண்டறிந்த நல்ல உண்மை ஆகும்!

தாதி, இரு கை வீசித் தலையிலே குடம் தாங்கி வருகிருள். கை வீசி விளையாடி வரினும், அவள் மனம் நீர்க்குடத்தேதான் இருக்கும். இதனை ஞானிகளது வாழ்க்கைக்கு ஒப்பிடுவது உண்டு. பாரதியாரும், அப்படியே எங்கெங்கு எந்தெந்தத் துறையில் தங்கியிருந்தாலும், அவர் வாழ்க்கையின் நோக்கு அவரை வழி விலகிச் செல்லுமாறு விட்டுவிடவில்லை. அவரிடம், தனது சீரிய குறிக்கோளைத் தமிழன்னை அடிக்கடி நினைப்பூட்டியே வந்தாள். ஒரு சிறிய நிகழ்ச்சி நமக்கு அதனை நன்கு வலியுறுத்துகிறது:

ஒரு முறை, நம் கவிஞர் மன்னரோடு சென்னை சென்றிருந்தார். வேறு பல புலவர்களும் போயிருந்தார்கள். தலைக்கு ஐந்நூறு ரூபாய் வீதம் எல்லாருக்கும் அரசர் நன்கொடை அளித்தார். மற்றவர் எல்லாரும், தத்தம் வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கி, மீதப் பணத்தை நூற்றுக் கணக்கிற் கையுடன் கொண்டு வீட்டிற்குத் திரும்பினர். நம் கவிஞர் திரும்பிய போது, பணப்பையிற் பதினைந்து ரூபாய்கள் மட்டும் இருந்தன. ஒரு வேளை, விலை மதிப்புள்ள வெள்ளிப் பாத்திரங்கள், புடைவை

கள், நகைகள் ஆகிய இவைகளை வாங்கி வைத்திருப்பாரோ என்ற ஆவல் மிகுதியால், அவர் மனைவியாரான செல்லம்மாள் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தார். பார்த்த போது, புடைவை ஒன்றுதான் இருந்தது. எஞ்சியவை பெரும்பாலும் தமிழ் நூல்களாய்க் காட்சி அளித்தன. சில ஆங்கில நூல்களும் இருந்தன. மனைவியாரது ஏமாற்றக் குறிப்பினை உணர்ந்தார் கவிஞர்; மனைவியாரை நோக்கி, "நீ பணத்திற்கு ஆசைப்படலாகாது. அழியும்பொருள் செல்வம். கல்வி அழியாப் பொருள். அழியும் பொருளைக் கொடுத்து அழியாப் பொருளை அல்லவா நான் வாங்கி வந்திருக்கிறேன்! மகிழ்ச்சி கொள்! வருந்தாதே!" என்று கூறினராம்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன? நம் கவிஞரிடம், தமிழ்க்கனல், என்றென்றும் அவியாது ஒளி விட்டுக்கொண்டேதான் இருந்தது. அரண்மனை அலுவல் பார்த்தார்: எனினும், அதனுல் பொருள் பல ஈட்டி நிலபுலம் வாங்கி இன்புற்று வாழ, அவர் கருதினர் அல்லர். தமிழன்னை, தன் குறை தீரத் தவம் செய்து பெற்ற புண்ணியப் புதல்வர் நம் கவிஞர். அவரை அவள் அங்ஙனம் குடும்பச் சிறு சேற்றில் அழுந்தி அழிய விடுவளா? விட்டிருந்தால், நாட்டின் நிலை என்ன ஆயிருக்கும்! தமிழின் கதிதான் யாதாகும்!

காலக் கழிவிலே, அவருக்கு அரண்மனை அலுவலிலும் வெறுப்பு மூண்டது. காரணம், கூட்டில் அடைபட்ட பறவைபோல, கைகட்டிய

சேவகம் அவருக்குப் பிடிக்காமல் இருந்ததே ஆகும். நிலையற்ற அரசர் தயவும், பிற வேலையாட்களின் பொறாமையும் சேர்ந்து அவ்வெறுப்புத் தீயை வளர்த்தன. அரசர் தயவையே பேணி எப்பொழுதும் காதற்பாட்டுகள் பாடிக்கொண்டிருப்பதிலும் அவருக்குச் சுவை அதிகம் கிட்டவில்லை. இங்நிலையிலே, மன்னருக்கும் கவிஞருக்கும் அன்பு உரிமை வலுத்து வந்தது கண்டு பொறாமை கொண்ட சிலர், கோள் மூட்டிவிடச் சரியான சமயம் நோக்கி இருந்தனர். கவிஞர் பாரதியார் ஒரு தடவை மனிதரைப் புகழ்வதில் விருப்பமில்லாமல், மக்களைப் பாடும் தொழிலின் இழிவு குறித்து ஒரு செய்யுள் செய்தார். பொறாமைக்காரர் சிலர், இச்சூழ்நிலையை நன்கு அவருக்கு எதிராகப் பயன்படுத்திக்கொண்டனர்: அரசரிடம் சென்று அப்பாடல் மன்னரை இழிவு செய்யும் நோக்குடன் குறித்துப் பாடியதாகக் கோள் மூட்டிவிட்டனர். அரசருக்குக் கோபம் உண்டாயிற்று. இதனை நம் கவிஞர் உணர்ந்தார்.

அரசர்கள் கோபித்தால், புலவர்கள் அதனை என்றுமே பொருட்படுத்த மாட்டார்கள். ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடப்பவர்கள், பிறர் கோபத்தைப் பொருட்படுத்துவானேன்! சோழன் குலோத்துங்கன், கவிச்சக்கரவர்த்தியாரான கம்பரை ஆதரித்தவன்; ஒரு சமயம், சிறு காரணம் கொண்டு புலவரைக் கோபித்தான்; நாட்டை விட்டு நீங்கிவிடுமாறு கம்பருக்கு உத்தரவிட்டான். கம்பர் அஞ்சவில்லை. "நீ ஒரு

வன்தானோ மன்னவன்? 'வளநாடு' என்பது உனக்குத்தான் உண்டோ? மற்றைய நாடுகளைக் கடல் விழுங்கிவிடவில்லையே! குரங்கேற்காத கொம்பில்லையே! அஃதொப்ப நான் சென்றால் என்னை விரைந்தேற்காத மன்னரும் உலகில் இரார். நான் போய் வருகிறேன். கொற்றவனையினும், நீ முனிந்தால் புலவர்கட்கு உலகிலே இடம் உண்டு என்பதை இன்று முதல் நன்கு தெரிந்துகொள்," என்று சொல்லி, நீங்கினார்.

எதிரியின் கோப தாபங்கட்குப் பயந்து என்றுமே புலவர்கள் நம் நாட்டில் புல்லடிமைத் தொழில் புரிந்ததில்லை. பொய்யடிமை இல்லாத புலவர்களாகவே அவர்கள் என்றும் வாழ்ந்து வந்தார்கள். கம்பரிடம் அன்று கண்ட அந்த நெஞ்சத்துணிவு, வழி உரிமையாய்ப் பாரதியாருக்கும் அமைந்திருந்தது. அவர் அரண்மனை அலுவலை அன்றைக்கே வெறுத்து உதறித்தள்ளினார்; மன்னரிடம் விடை பெற்றுக்கொண்டு, புறப்பட்டார். நம் கவிஞர் எட்டையபுர மன்னரிடம் அலுவல் பார்த்த காலம் 1901-ஆம் ஆண்டு முதல் 1904-ஆம் ஆண்டு வரையுள்ள நான்கு ஆண்டுகளே என்பர்.

அக்காலத்தில் மதுரைக் கல்லூரியில் கோபாலகிருஷ்ணையர் என்ற புலவர்மணி, தமிழ் விரிவுரையாளராய் இருந்தார். தமிழிலே அவர் பெரும்புலவர்; பிறருக்கு உதவும் பேருபகாரி; நல்ல செல்வாக்கும் உள்ளவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒப்புயர்வற்ற பெரும்புலமை அவருக்கு உண்டு. பாரதியாரிடம் அவருக்கு நல்ல

பழக்கம் இருந்தது. பாரதியாரது தமிழறிவு, கவிதை நலன் முதலியவற்றைப்பற்றி அடிக்கடி அவர் பிறரிடம் பாராட்டிப் பேசுவது வழக்கம். பாரதியாருக்கு உற்ற நண்பராய் அவர் இருந்ததலேதான், மதுரைச் சேதுபதி பள்ளியில் அவருக்கு அலுவல் கிடைத்தது. அவ்வலுவலிலே மூன்று மாதம் தங்கி, பாரதியார் தமிழாசிரியத் தொழில் புரிந்தார். அதிலும் அவருக்குப்பற்று இல்லை. மூன்ருவது மாதத்தில்,அவ்வேலையையும் விட்டு நீங்கினர். பாரதியார் மதுரையில் இருந்த போது அங்குள்ள தமிழ்ச்சங்கத்திற்குச் சென்று அடிக்கடி புலவர்களுடன் அளவளாவிப் பழகி வந்தார். பல புலவர்கள் பழக்கமும் இதனல் பாரதியாருக்கு வாய்த்தது. பாரதியாருக்கு மதுரைவாசம், இங்ஙனம் புலவர் பழக்கத்தையும் ஆசிரியத் திறமையையும் தந்து, பிற்காலத்தில் அவர் செய்ய இருந்த தமிழ்ச் சீர்திருத்தத்துறைக்கு ஓரளவு வழித்துணையாய் இருந்திருக்க முடியும் என்று நாம் கருதலாம்.

சேதுபதி பள்ளிவேலையை விட்டுதறிய பின்னர், பாரதியாரது தொழில் முயற்சி வேறு ஒரு திசை நோக்கித் திரும்பியது. அதுவரை சாதாரணப் புலவர் திலகரான பாரதியார், ஒரு தேசியக் கவிஞராகிப் பேரும் புகழும் பெறும் பெருநிலைக்குரிய மாற்றத்தை நாம் இங்கேயே காண நேரிடுகிறது. சென்னையில் அக்காலம் சுதேசமித்திரன் பத்திரிகையைத் தேசபக்தர் சுப்பிரமணிய ஐயர் நடத்தி வந்தார். அவருக்கும், மதுரைக் கோபால கிருஷ்ணையருக்கும் நல்ல நட்பு

இருந்தது. அடிக்கடி மதுரை வரும்போது, அவர் கோபாலகிருஷ்ணையருடன் பத்திரிகை வளர்ச்சி பற்றிக் கலந்து பேசுவது வழக்கம். அதன்படி ஒரு முறை சுப்பிரமணிய ஐயர், "எனக்குத் துணை செய்ய ஒருவர் தேவை. அவர் நல்ல தமிழ் எழுதக்கூடியவராயும், தேசிய உணர்ச்சியுடையவராயும் இருத்தல் நலம், ஒருவர் கிடைத்தால் பார்த்து அனுப்புங்கள்," என்று தம் நண்பரிடம் சொன்னார். நம் கவிஞரைத் தேசியத்தில் திருப்பி நலம் காணத் தமிழன்னை தருணம் பார்த்துக் கொண்டிருந்த காலமும் அதுவே ஆகும். காலமும் கணக்கும் ஒன்று சேர்ந்தன. கோபாலகிருஷ்ணையர், பாரதியாரைத் தருவித்துச் சுப்பிரமணிய ஐயருக்கு அறிமுகப்படுத்திவிட்டார். நம் கவிஞர் அவருடன் சென்னை சென்று, 1904-ஆம் ஆண்டில், சுதேசமித்திரன் காரியாலயத்தில் அலுவலில் அமர்ந்து பணி ஆற்றினார். நம் கவிஞருக்குக் கிட்டியது உதவி ஆசிரியர் பதவி. அவர் பெற்ற சம்பளம் மிகக்குறைவு. ஆனாலும், ஐயர் அவர்கள் அன்போடும் ஆதரவோடும் பெரிதும் நம் கவிஞரைப் பேணிப் பாராட்டி, ஆதரித்து வந்தார். அச்சுச் சட்டம் மிகக் கடுமையாய் இருந்த அக்காலங்களில், தினசரிப் பத்திரிகைகள் நடத்துவது இக்காலத்திற்போல எல்லாருக்கும் எளிதன்று. ஆதலால், ஐயர் அவர்களே தலையங்கம், செய்தி, விமரிசனம் முதலியன எழுதி வந்தார். ஆங்கிலச் செய்தி, தந்தி, பேச்சு, கட்டுரை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றைப் பாரதியாரே செய்ய நேர்ந்தது. இந்தப் பணியையும்

பாரதியார் நல்லமுறையிலே, கண்டவர் போற்று மாறு செய்து புகழ் பெற்றார். அவரது திறமையைக்கண்டு மெச்சிய சுப்பிரமணிய ஐயரே ஒரு சமயம், "நீர் நல்ல தமிழ் எழுதுகிறீர்! உமது எழுத்துக்கு இலட்சம் கொடுக்கலாம். கவியிலே காளிதாசன் நீர். ஆனால், அருமை அறிந்து கொடுக்க நான் போஜ மன்னன் அல்லவே!' என்று நம் கவிஞரிடம் மனம் உளைந்து கூறினாராம். இங்ஙனம் பலரும் மெச்ச இரண்டரை ஆண்டுகள் நம் கவிஞர் வேலை பார்த்தார். ஆயினும், நம் கவிஞர் பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டது, ஊதியம் பெற்று வயிறு வளர்க்க விரும்பிய நோக்கத்தால் அன்று. இந்தத் துறையில் புகுந்து அவர் செயலாற்றியதும் தமிழன்னையின் தூண்டுதலாலேயே ஆகும். அவரிடம் அமைந்திருந்த தமிழ்ப் புலமைக்கு எந்த விதத்திலும் சளையாத 'தேசபக்தி' இத்துறையிலேதான் உருவாகி வளர்ந்தது. மொழிபெயர்ப்பு வேலைகள் செய்யும் போது ஆங்கிலத்திற்கு நேரான தமிழ்ச் சொற்களை அவர் கண்டு பிடிப்பதில் முனைய வேண்டியதாயிற்று. அப்போது அவர் தமிழ் மொழியின் மேன்மையையும் ஆற்றலையும் ஒப்பு நோக்கி உணர்ந்து பாராட்டினார்.

நம் கவிஞர் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு அரசியல் துறையில் நுழைய ஆரம்பித்த அந்தக்காலத்தில், அவருக்குப் பலருடைய நட்பும் உண்டாயிற்று. சிறப்பாகக் கப்பலோட்டிய தமிழரும், தமிழிலே பெரும்புலவருமான தூத்துக்குடி வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்

கள் நட்புக்குறிப்பிடத்தகும். இருவரும் நெருங்கிய நண்பர் ஆயினர். 'என் உள்ளமே பாரதி நாவில் துடித்தது,' என்று பிள்ளையவர்கள் கூறி வந்தது உண்டாம்! பிள்ளை அவர்கள், நம் கவிஞரைத் தூண்டிப் புதிய புதிய கருத்துக்கள் தந்து கவி பாடுமாறு கூறி வந்தார்கள். பாரதியாரின் பாடல் உலகிற்கு நற்பயன் தந்து சிறக்க நல்லதொரு வாய்ப்பும் இருந்தது. அவ்வாய்ப்புத்தான் 'தேசீய இயக்கம்.' அதைத் தூண்டும் தேசிய கீதங்களையே பாரதியார் பாடினார். அக்காலத்தில் சென்னைச் சட்ட சபைத் தலைவராயிருந்த டி. வி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் பாரதியார் பாடல்களை வியந்து, அச்சிட்டு, நாடெங்கும் ஏராளமாகப் பரப்பினார்கள்.

வங்காளப் பிரிவினைக் காலத்திற்குச் சற்று முந்திய காலங்களில் எல்லாம், நம் கவிஞரின் தேசீயத்துடிப்புக்கு எல்லை கட்ட முடியாது. இந்நிலையில் காசியில் நடந்த தேசியக் காங்கிரஸ் கூட்டத்திற்கு அவர் சென்று வந்தார். அது, அவரை ஒரு புது மனிதராக மாற்றிற்று. நாட்டிலும், எங்கும் மக்கட்கு விடுதலையிற் பேராவல் மூண்டிருந்தது. வங்காளப் பிரிவினையும் சுதேசி இயக்கமும் கூடி, அவ்வார்வத்தீயினை விசிறி விட்டன. அவ்வாவலை ஒரு புதுப் பலம் கொடுத்து வளர்க்க நம் கவிஞர் விரும்பினார். தம் விருப்பங்களை உள்ளபடி வெளியிட வேண்டும் என்று எண்ணிய அவருக்குச் சுதேசமித்திரனில் முழுஉரிமை இல்லாதது ஒரு பெருங்குறையாய் இருந்தது. மேலும், அதுவரை

அவர் பார்த்த எந்த அலுவலிலும் ஒருவர் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்தவரும் அல்லர். பாரதியாரின் நாட்டு வேட்கையையும், வாக்கு வன்மையையும், அவர்தம் இச்சைப்படி தொண்டாற்ற முடியாத நிலையில் இருந்து தயங்குவதையும் அன்பர் பலர் அறிந்தனர். திருமலாசாரியார் என்ற பேரன்பர் ஒருவர், 'இந்தியா' என்ற வார இதழினைத் தோற்றுவித்து, பாரதியாரை அதன் ஆசிரியர் ஆக்கினர். சுதேசமித்திரன் ஆசிரியர் சுப்பிரமணிய ஐயரும் பாரதியார் கருத்தறிந்து ஆசி கூறி அனுப்பினர். 1907-ஆம் ஆண்டு தொடங்கிப் பாரதியார் இந்தியாப் பத்திரிகையின் ஆசிரியராய் அமர்ந்து, அதனை நடத்தி வந்தார்.

நாட்டுப் பற்றும், தமிழ்க்கனலும் இரு கண்கள் போன்று நம் கவிஞரிடம் விளங்கின; ஒன்றை ஒன்று அடுத்துச் சிறப்பும் எய்தின. பாரதியாரிடம் அமைந்த தெளிந்த உரைநடைக்கும், எளிய கவி வளத்திற்கும் தக்க வாய்ப்புக் கிடைத்தது. காலத்திற்குத் தேவையான செய்தி—செய்திக்கேற்ற உணர்ச்சி—உணர்ச்சிக்குத் தக்க நடை—நடைக்கேற்ற தெளிவு—தெளிவுக்கு மிஞ்சின திண்மை—இவற்றோடு கூடிப் பாரதியார் வாக்கு நாட்டிற்கு நலம் புரிந்தது. எல்லாரும், 'இந்தியா'வை வாங்கிப் படித்தனர். தொடங்கி ஒரு மாத காலத்துள் நாலாயிரம் சந்தாதார்கள் சேர்ந்தார்கள். எழுதுவதுடனில்லாது, பேச்சுப் பணியிலும் நம் கவிஞர் இறங்கினர்; சென்னைக் கடற்கரையில் நாட்டு

வெறி துடிதுடிக்கப் பல முறை பேசி வந்தார்; விடுதலைக்கிளர்ச்சியை வளர்த்த சிதம்பரம் பிள்ளை அவர்களுடன் கூடிப் பணி புரிந்தார். 'இந்தியா'ப்பத்திரிகை நடத்திய காலத்திலே தான் பாரதியார் புகழ் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிற்று. கவிதையிலும், எழுத்திலும், பேச்சிலும் உள்ள அவரது வல்லமையை நாட்டுப் பொதுமக்கள் நன்கு உணர்ந்து பாராட்டினார்கள்.

இந்த நிலையில், வங்காளப் பிரிவினை ஏற்பட்டது. அரசியலிலோ, கொந்தளிப்பு அதிகம். பிரிவினையை எதிர்த்த பெருங்கிளர்ச்சி நாட்டிலே இருந்தது. அதில் பாரதியாரும் ஈடுபட்டார். லஜபதிராய், நாடு கடத்தப்பட்டார். அடக்குமுறை எங்கும் தாண்டவமாடிற்று. அது நம் கவிஞருக்கும் வாழ்க்கையிலே ஒரு பெரிய மாறுதலுக்கான நேரமாய் அமைந்தது. தமிழின் குறை நீக்கப் பிறந்த புண்ணியப் புதல்வர் அரசியற்சிறு சேற்றிலே தலை மூழ்க அழுந்திவிடுவது தமிழன்னைக்குப் பிடிக்கவில்லை. இது வரை அவரது வாழ்க்கையைத் தன் போக்கின் படியே திருப்பித் திருத்தி வந்த தமிழ்த்தாய், இப்போதும் அவரைத் திருப்பித் தமிழ்த்துறையிலே கொண்டு வந்து நிறுத்த வழி தேடினாள். இந்நிலையில் அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டத்திற்கு 'இந்தியா'ப் பத்திரிகை உள்ளாயிற்று. 'இந்தியா'ப் பத்திரிகையின் வெளியீட்டாளர், கைது செய்யப்பட்டார். அடுத்தபடி அப்பத்திரிகையின் ஆசிரியராகிய தமக்கும் துன்

பம் வரலாம் என்பது பாரதியாருக்குத் தோன்றி யது. நண்பர்களுடன் கலந்து பேசினர். "சிறை யிலே சென்று புழுங்குவதைக்காட்டிலும் கவி தைத் தொண்டிலும் தமிழ்ப் பணியிலுமே நீங்கள் ஈடுபட வேண்டும்," என்று அன்பர்கள் கூறினர்கள். பாரதியாரை அரசியற் பெருங் கடலிலேயிருந்து தமிழ்த்துறையில் மாற்றிச் செலுத்த விரும்பிய தமிழ்த்தாயும், அதற்குத் திருவுள்ளம் கொண்டாள். சிட்டி குப்புசாமி ஐயங்கார் என்பவருக்கு ஓர் அன்பர் அறிமுகக் கடிதம் கொடுத்து, பாரதியாரை மறைந்துறைய மன்ருடினர். அது கொண்டு, பாரதியார் புதுச் சேரி சென்று தங்கி வாழ உறுதி கொண்டார்.

V புதுவை வாழ்க்கை

மறுநாள் இரவு பாரதியார் சைதாப்பேட்டையில் பயணச் சீட்டு வாங்கி இரயில் ஏறிப் புதுவை சேர்ந்தார்; சிட்டி குப்புசாமி ஐயங்காரைக் கண்டு, அறிமுகக்கடிதத்தை நீட்டினர். எளிய வியாபாரியும் நல்ல தமிழறிஞருமாய் இருந்த அவர், பாரதியாரை விரும்பி வரவேற்றார்; 'வீட்டில் இரும்,' என்று சொல்லித் தங்குமிடம் தந்து ஆதரித்தார். சிட்டி குப்புசாமி ஐயங்காருக்கும், பாடல் புனையும் பழக்கமுண்டு. 'பாரதியார் பாடும் புலவர்,' என்று கடிதத்திலே கண்டிருந்த செய்தி, ஐயங்காருக்கு அவர் மீது பற்றுதல் உண்டாக்கியது. நம் கவிஞரை அவர் போற்றினர். ஆயினும், அவர் யாருக்கும் புகல் அளிக்கும் நிலையிலே உள்ள பெரும்பொருளாளர் அல்லர். எப்படியோ, நம் கவிஞருக்கு வேற்றுநாட்டில் புகலிடம் கிடைத்தது. கற்றாரைக் கற்றார் காமுற்றுப் போற்றுவது இயல்புதானே! இப்படி நம் கவிஞரின் புதுவை வாழ்க்கை, 1908-ஆம் ஆண்டில் தொடங்கியது.

கவிஞர் புதுவை புகுந்தது குறித்து நம்

மனத்தில் சில ஐயங்கள் எழும்: சிலர், அவரைப் பயங்கொள்ளி என்று கருதவும் இந்நிகழ்ச்சி இடம் தரலாம்! ஆனால், நிகழ்ச்சியின் உட்போக்கைக் கூர்ந்து கவனியாமல், மேலெழுந்த வாரியாக நாம் அப்படி நினைத்து முடிவு பண்ணுவது பெருந்தவறு. 'உச்சி மீது வான் இடிந்து வீழ்ந்து நின்ற போதிலும்—அச்சம் இல்லை! அச்சமில்லை! அச்சமில்லை!' என்று வீரமுழக்கம் செய்து, நாட்டாருக்கும் அஞ்சாமை கற்பித்தவர் நம் கவிஞர். அத்தகையவர், கோழைத் தனத்தால் பயந்து புதுவை வந்தார் என்பதில் என்ன பொருள் இருக்க முடியும்? வந்தது பயத்தால் அன்று; அன்பர் பணியால் என்பேன். கவிஞரிடம் கொண்ட பெரும்பற்றால், தமிழன்பர் பலர் தமிழுக்கு அவரால் வரத்தகும் மேன்மை கருதி, புதுவைபுகுந்து தமிழ்த்தொண்டு இயற்றுமாறே அவர்க்குப் பணித்தனர். மேலும், அது வரையில் நம் கவிஞரின் வாழ்க்கைப் போக்கை உருவாக்கி வந்த தமிழன்னையின் திருவுள்ளமும் அப்படியே கருதிற்று. பாரதியார் புதுவை புகுந்திராதிருந்தால், அவரும் பிறர் ஒப்ப அரசியற்சூழலிலே சிக்கி அழுந்தி இருப்பர்; சுயநலச் சேற்றிலே மூழ்கி, இருந்த சுவடு தெரியாமல் அழிந்து கழிந்ததுதான் அவர் இயல்பெனக் கேட்டும் இருப்போம். தமிழிற்பெரும்புலவராய், பொன்றாப் புகழொடு என்றும் நின்று நிலைத்திருக்கும் பேற்றினை அவர் பெறுமாறு செய்தது புதுவை வாழ்க்கையே என்பதனை அவரது பிற்கால வரலாறு நமக்கு நன்கு தெரிவிக்கும்.

நம் பாரதியார் புதுவை புகுந்துள்ள செய்தி சென்னை அரசியலாருக்குத் தெரிய வந்தது. அதுவரை கடன்பட்டவர்களுக்கு மட்டும் இடர் நீக்கும் புகலிடமாய் இருந்தது புதுவை. நம் கவிஞரின் வருகையால், தேசபக்தர்கட்கும் அதுவே புகலிடமாகும் என்ற உண்மையும் துலங்குவதாயிற்று. இப்படியே அரசியற்கைதிகள் பலரும் தெரிந்து வந்து புகுவதால் தனக்கு நன்மை ஏற்படாது என்று கருதியது அரசாங்கம். ஆகவே, கவிஞரை மிரட்டித் தொல்லை செய்ய அது வேவுப்படையை ஏவிற்று. எனவே, 'மழை விட்டும் தூவானம் விடவில்லை,' என்பதற்கேற்ப, கவிஞர் புதுவை வந்தும் அல்லல்கள் அவரை விடவில்லை. ஒற்றர் அவரை எங்கும் தொடர்ந்து சென்று தொல்லைகள் கொடுத்து வந்தனர்.

இந்நிலையிலே, புதுவை மக்களுட்சிலர், "அரசியலாணைக்குப் பயந்து ஒளிய வந்தவர் இவர்," எனக் கருதி, அவரை ஏளனமும் செய்தனர். பலர், பாரதியார் நின்ற இடத்திலும் நிற்கத் துணியாமல், பயந்து வழி விலகி ஓடினர். எனவே, சில காலம் அவருக்குப் பேச்சு வார்த்தைக்கும் ஆள் கிடைப்பது அரிதாயிற்று. கவிஞருக்கோ, ஊர் புதிது. கையிலோ, காசில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. வேற்று நாடு புகுந்த அவர் ஆற்றுமை நீக்கித் தேற்ற முன்வருவார் வேண்டாவா? நம் கவிஞர், தூண்டிற்புழுவினைப் போலத் துடித்தார்; வறுமையையும் துன்பத்தையும் வலிய ஏற்றுக்கொண்டார். இருந்தாலும், நெருப்பிலிட்ட பொன் போல

அவரது செம்மைதான் சிறந்துநின்று ஓங்கி ஒளி விட்டுக் காட்டிற்று!

'பட்ட காலிலே படும்,' என்பதற்கேற்ப மற்றொரு தொல்லையும் அடுத்து வந்தது நம் கவி ஞருக்கு: அவரைப் பின் தொடர்ந்து வந்த ஒற் றர்கள், அவருக்குப் புகலிடம் தந்த ஐயங்காரை அணுகினர்கள். "பாரதியார் மன்னரின் எதிரி; பெருங்குற்றவாளி; சதிகாரர்; தப்பி ஓடி ஒளிய வந்தவர். அவருக்கு இருக்க இடம் தந்து உதவு வது தகுதியற்ற செயல். இதனால், பல தொல்லை கள் உங்கட்கு வரும். ஆகவே, அவரை நீங்கள் விலக்கிவிடுவதே நல்லது," என்றெல்லாம் அவ ரிடம் சொல்லி, அவர்கள் அவரை மிரளவைத்து விட்டார்கள். அவரோ, ஓர் எளிய வியாபாரி; பயந்த சுபாவமுடையவர்; ஏதோ தமிழன்பால், சிறிது தங்க இடம் கொடுத்தவர், தாமும் அர சாங்கத்தின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும் என்பது தெரிய வந்த போது, 'நமக்கேன் இந்தத் தொல்லை!' என்று தமது பயந்த இயல் பால், நடுக்கம் உற்றார்; அன்று மாலை நம் கவிஞர் வந்தவுடன் அவரை வேறிடம் பார்க்கும்படி வேண்டினர். புதிய ஊரிலே பாரதியார் என்ன செய்வார்! வீடு கொடுத்த ஐயங்காரே பயந்து காலி செய்யச் சொல்லும் நிலை வந்தால், புதிதாக வேறு யார் வீடு கொடுத்துதவுவார்?

இருந்தாலும், கவிஞர் அவரிடம் இரண்டுநாள் தவணை கேட்டு வாங்கினர். நாளிரண்டும் கறங்கு போலச் சுழன்று போயின. வீடு கிட்டவில்லை. ஐயங்காருக்கோ, பாரதியாரிடம் பயமும், அது

காரணமாக வெறுப்பும் ஏற்பட்டன. வாய் திறந்து கவிஞரை அவர் கடிந்து சொல்லாவிட்டாலும், அவர் நெஞ்சம் கடுத்ததை முகம் காட்டிற்று. சொல்ல ஒண்ணாத துயரத்துடன் நம் கவிஞர், தெருத் திண்ணையில் உட்கார்ந்து கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். திடீரென வேறு ஒரு நண்பர்—குவளை-கிருஷ்ணமாசாரியார் என்பவர்—தோன்றினார்; நம் கவிஞர் படும் தொல்லையின் காரணத்தைக் கேட்டறிந்தார்; சுந்தரேசையர் என்ற தம் அன்பரிடம் அழைத்துச் சென்றார். சுந்தரேசையரே நம் கவிஞருக்குத் தகுந்த வீடமர்த்தி, வேண்டிய பிற உதவிகளும் செய்து, கவிஞரை ஆதரித்தார். 'பகை நடுவில் அன்புருவான நம் ஈசன் வளருகின்றான்,' என்று பாரதியாரே பிற்காலத்தில் பாடியிருக்கிறார். அந்த ஈசனேதான் இப்படி அன்பர் உருவில் வந்து, வேற்று நாட்டிலே தொல்லை மிகுந்த காலங்களிலே அவருக்கு உதவியிருக்கிறான் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது! விலங்கற்ற கைதியாய், வறுமைப் பிணி முதலிய துன்பங்களுக்கு ஆளாகி, வெளியில் புகழ்வாரும் நெஞ்சில் நேசிப்பாரும் இன்றிப் புதுவையில் அவர் பலவாறு வருந்தினர்.

இங்ஙனம் நம் கவிஞர் புதுவை மண்ணில் காலடி வைத்துத் திக்குத் தெரியாமல் வருந்திக் கொண்டிருக்கும்போது அவர் நண்பர் மண்டயம் ஸ்ரீனிவாசாசாரியாரும் வந்து சேர்ந்தார். அவர் புதுவையில் முன்னமே இருந்து பழகியவர். பாரதியாருக்குப் பலரையும் அவர் அறிமுகம்

செய்து வைத்தார். புதுவை போந்து, நம் கவிஞரின் துணையினால் மீண்டும் 'இந்தியா'ப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்ற நோக்குடன் வந்தவர் அவர். பாரதியாரும் மனம் ஒப்பி ஆதரவு கொடுத்தார். இயந்திரங்கள் யாவும், சென்னையிலிருந்து வந்தன. தூப்பிளே வீதியிலிருந்து பாரதியாரை ஆசிரியராகக்கொண்டு 'இந்தியா' மீண்டும் வெளி வரத் தொடங்கிற்று. சிறிது மன அமைதியும் பொருள் வருவாயும் பாரதியாருக்கு இதனால் ஏற்பட்டன. இச்சமயங்களில், நம் கவிஞர் மனைவியாருக்குக்கூட அடிக்கடி கொஞ்சம் பணம் அனுப்பி வந்தது உண்டு. அவர் அடிக்கடி ஊருக்குக் கடிதம் எழுதி, மனைவியாருக்கு ஊக்கம் அளித்து வந்தார். அவருக்கு இந்நிலையில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. 'சகுந்தலை' என்று அக்குழந்தைக்குப் பெயரிடுமாறு மனைவியாருக்குக் கடிதம் எழுதினார். அப்போது நம் கவிஞர் வடமொழிச் சாகுந்தல நாடகத்தை ஆர்வமுறப் படித்து வந்ததாகவும், அதன் நினைவால் அப்பெயரிட விழைந்ததாகவும் அறிகிறோம். இங்ஙனம் வாழ்க்கை இருளிலே ஒரு சிறிய மின் வெட்டாகச் சிறிது காலம் இன்பப்பேறும் புதுவை வாழ்க்கையில் நம் கவிஞருக்குக் கிட்டிற்று.

குழந்தை பிறந்த ஆறு மாதத்திற்குள் தம் மனைவியாரையும் புதுவைக்கு அழைத்து வந்து கவிஞர் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டார். எனினும், இவ்வின்ப வாழ்வு நெடிது நாள் நிலைக்கவில்லை. 'இந்தியா'ப் பத்திரிகை மக்க

ளிடையே சுதந்தர வெறியை மூட்டிவிட்டது. 'பிரிட்டிஷ் எல்லைக்குள் அது வரலாகாது,' எனத் தடை ஏற்பட்டது. மக்களின் பயம் ஒரு புறம்; அரசாங்கத்தாரின் கோபம் ஒரு புறம்; இவ்விரு சிறைகளையும் தாண்டிப் பத்திரிகை எப்படி வாழும்! பத்திரிகை சரிவரச் சந்தாதார் கட்குப் போவதில்லை; அவர்கள் அனுப்பும் பண மும் அவருக்குக் கிடையாமல், அரசியலாரால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. அவரிடம் மீண்டும், தொல்லையும் துயரும் ஒல்லை வந்து அணுகின.

இன்பமும் துன்பமும், வண்டி உருளையை ஒத்து, மாறி மாறி வரும் என்பர். 1910-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் யோகியார் அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்தார். அதிலிருந்தே நம் கவிஞ ரின் வாழ்க்கை மலர், மலர்ந்து மணம் வீச ஆரம்பித்துவிட்டது என்று சொல்லலாம்! அர விந்தரின் கூட்டுறவினாலே, பாரதியாரின் வாழ்வு புது நினைவையும் கலைப்போக்கையும் பெற்றுத் திரும்பிற்று! அரவிந்தர், வேதச்சுவை உணர்ந்த ஞானியார்; கீதை, உபநிஷத்துக்கள் - இவற்றை நன்கு படித்து, இவற்றிற்கண்ட உண்மைக்கு இயைய வாழ்க்கையை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர். அவர் புதுச்சேரி அடைந்து இருக்கு வேதத்தைச் சிக்கற ஆய்ந்து வந்தார். அடிக்கடி நம் கவிஞர், அரவிந்தர் விடுதிக்குச் சென்று, அவரோடு அளவளாவுவார்; கட்டிய கவிதைகளைக் காண்பிப்பார். நம் கவிஞரின் கவி தைகளை அரவிந்தர் சுவைத்துப் போற்றுவார்.

அரவிந்தரின் கருத்துக்கள் யாவும் நம் கவிஞரின் வாக்கின் வழியே உருக்கொண்டன. அவர் உறவு பாரதியாருக்குப் பெரும்பயன் அளித்தது; மன ஆறுதலைத் தந்து, வாழ்க்கையின் போக்கையே மாற்றிற்று.

அரவிந்தர் நடத்திய பத்திரிகையைத் தழுவி, பாரதியார் புதுவையில் 'கர்ம யோகி' என்ற தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கிச் சில காலம் நடத்தினர். 'பதஞ்சலி யோக சூத்திரம்' வட மொழியில் இருந்தது. அதனைச் சுவாமி-விவேகானந்தர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். அதிற்சில குறைகள் இருந்தன என்பது நம் கவிஞர் எண்ணம். கவிஞர் மூலத்திலிருந்தே கருத்தைவாங்கி, நல்ல தமிழில் மொழிபெயர்த்து அதனைக் கர்மயோகியில் பகுதி பகுதியாக வெளியிட்டு வந்தார். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல்வேண்டும்," என்னும் கருத்துடைய அவர், அப்படியே பதஞ்சலி யோக சூத்திரத்தை மொழி பெயர்த்தது, அதுவரை எவரும் புகாத ஒரு புதிய துறை ஆகும். அம்மொழி பெயர்ப்பினை அரவிந்தர் மிகவும் போற்றினர். வெறுந்தேசபக்தராகவேண்டிய நம் பாரதியாரைப் புதுவை வாழ்க்கை பெருங்கவிஞராக மாற்றியது. என்றல், அரவிந்தர் கூட்டுறவு அப்படியே வெறுங்கவிஞராயிருக்க வேண்டிய அவரைப் பத்திமார்க்கத்தில் திருப்பித் தெய்வக் கவிஞராய் நின்று நிலைக்க வழி செய்தது என்று சொல்லிவிடலாம்.

இதற்கு இடையிலே, இலண்டன் பாரிஸ்

ஒற்றர்களைத் தப்பி, பக்கிரி உடையில் மாற்று வடிவத்துடன் வ. வெ. சுப்பிரமணிய ஐயரும் புதுச்சேரி வந்து சேர்ந்தார். இதனால் ஐயர் - பாரதியார்-அரவிந்தர் ஆகிய இம்மூவர் கூட்டுறவு வலுத்தது. ஐயர், நல்ல அறிஞர்; பல நாட்டு இலக்கியங்களைப் பழுதறப் பயின்றவர்; கம்பர், வள்ளுவர் போன்றோர் தந்த தமிழ்ச் செல்வங்களை உலகிற்கு விளக்கித் தரவேண்டும் என்ற நினைப்புடையவர். அதனாலேயே, அவற்றை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஐயர், புலவர் பலருடன் கம்பரைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவார். பாரதியாரும் உடனிருந்து கேட்பார். இடையே நம் பாரதியார் அதனை மறந்து பாடத் தொடங்கி விடுவார். தொடங்கினால், ஐயர் கம்பரைநிறுத்தி, பாரதியார் பாட்டையே கேட்டு உருகுவாராம்! ஐயர், காளி வழிபாடு புரிபவர். நம் கவிஞருக்கும் அவ்வியல்பு நாளடைவிலே உரியதாயிற்று. இருவருக்குமே காளியின் துணையால் வலுப்பெற்று நாட்டுத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நாட்டம் உண்டாயிற்று. பாரதியாரின் 'சக்திப் பாடல்கள்' பலவும் இவ்வழிபாட்டிற்காகவே பாடப்பெற்றனவாகும். இப்படி ஐயர் கூட்டுறவு, நம் கவிஞரின் கலைஞான வாழ்வினை நல்ல முறையிலே உருப்படுத்திவிட்டது. அரவிந்தர் நட்பு, வேதாந்த நாட்டத்தைத் தந்தது. கவித்துவமோ, பாரதியாரின் பிறப்பிலே அமைந்தது. இவை எல்லாம் கூடி, அவரது சீரிய இலக்கியங்கள் எல்லாம் வெளி வரும்படியான நல்ல வாய்ப்பை அவருக்கு உண்டு பண்ணிவிட்டன.

ஒரு நல்ல கவிஞருக்கு வேண்டுவன, இயற்கையிலே கவிதை புனையும் ஆற்றல், உண்மை உணர்வதிலே நாட்டம், சீரிய இலக்கியப் பயிற்சி என்னும் இவ்வளவே ஆகும். இயற்கையிலே பாடும் வன்மை பெற்ற நம் கவிஞருக்கு அரவிந்தர் நட்பால் வேதாந்த நாட்டமும், ஐயர் கூட்டுறவால் இலக்கியப் பயிற்சியும் நல்ல முறையிலே வாய்த்துப் பயன் தந்தன. இச்சூழ்நிலை, அவருக்கு நல்ல இலக்கிய ஆக்கங்கள் உண்டாக்கத் துணை புரிந்தது. மேலும், புதுவை - தோப்பும் துரவுமாய் அமைந்து - இயற்கை வளம் மிகுந்து காட்டும் ஓரிடம் ஆகும். நம் கவிஞர் அடிக்கடி தோட்டங்களில் வசிப்பதையும், கடற்கரையில் உலாவுவதையும் வழக்கமாக வைத்துக் கொண்டார். கிருஷ்ணசாமி செட்டியார் என்பவர், பாரதியாரின் உற்ற நண்பர். புதுச்சேரிக்கு அடுத்த முத்தியாலுப் பேட்டையில், அவருக்கு ஒரு தோட்டம் உண்டு. அங்கு நம்கவிஞர் அடிக்கடி போவதுண்டு. அங்கேதான் பாரதியார் தமது சிறப்புவாய்ந்த 'குயிற்பாட்டை'ப் பாடினராம்.

அரவிந்தர் பழக்கத்தால் வேதாந்த நாட்டம் பாரதியாருக்குஉண்டாயிற்றுஎன்று கூறினேன். அது கொண்டு பாரதியார் கீதையை ஆராய்ந்து அழகாக மொழி பெயர்த்தார். வேதப் பாசுரங்களிலும் நாலாயிரப் பிரபந்தத்திலும் காதல் கொண்டு, சிலவற்றை அழகாக ஆங்கிலத்தில் ஆக்கித் தந்தார். ஐயரோடு கூடி, காளி வழிபாடு செய்து வந்த பழக்கம், அவருக்குச் 'சக்திப்

பாடல்களைப்' பாடத் தூண்டுதலாய் இருந்தது. கீதைப் பயிற்சியும் அரவிந்தர் கூட்டுறவும், நம் பாரதியாருக்குக் கண்ணன் வழிபாட்டில் ஊற்றம் தந்தன. கண்ணன் பாட்டைப் பாட, அவைகளே காரணமாய் இருந்தன. 'ஞானரதம்' என்னும் அரிய வசன இலக்கியமும் புதுவையிலேதான் இயற்றப்பட்டது. சென்னையில் நடந்து வந்த 'மெட்ராஸ் ஸ்டாண்டர்டு' என்ற ஆங்கிலத்தினசரி இதழில் பாரதியார் கீதையைப் பற்றி, பேராசிரியர் சுந்தரராமனோடு விவாதமும் நடத்தினர். அதிலே பாரதியாரின் புலமையை அனைவரும் உச்சிமேற்கொண்டு மெச்சிப் போற்றினர். அதிலிருந்தே நம் கவிஞரின் ஆங்கிலப் புலமையையும், வடமொழி மேதையையும் உலகறிந்து புகழலாயிற்று!

மகாபாரதத்தை, 'கிரிபித்து' என்ற வெள்ளைக்காரரும், இரமேஷ் சந்திர தத்தர் என்ற வங்க அறிஞரும் தனித்தனி மொழி பெயர்த்திருக்கின்றனர். அம்மொழி பெயர்ப்புக்கள் 'பண்டம் அற்றவை' என்று பாரதியார் கருதினர். அரவிந்தரும் ஐயரும் அதே கருத்தினை வலுப்படுத்தினர். அதற்காக, நம் கவிஞர் வியாசபாரதத்தைப் படிக்க நேரிட்டது. அதிலிருந்து, 'பாஞ்சாலி சபதம்' என்ற இறவாத புது நூல் ஒன்று நம் கவிஞர் வாக்கில் உருக்கொண்டது. வேதாந்தப் பாடல்களும், பாரதி அறுபத்தாறு முதலிய நூல்களும் இச்சூழ்நிலையிலே தான் கருக்கொண்டு வெளிவந்தன. இங்ஙனம் நம் கவிஞர் புதுவை வந்தது தமிழுக்கே ஒரு

நல்ல காலமாயிற்றென்பதை நாம் அறிகிறோம். அக்காலத்திலேதான் பாரதி நூல்கள் யாவுமே உருக்கொண்டெழுந்தன என்பதிற் பிழை ஒன்றும் இல்லை. புதுவை வாழ்வையும், அரவிந்தர் உறவையும் நீத்த பின்பு பாரதியார் கட்டுரைகளைத் தவிர வேறு பெரிய நூல் ஒன்றும் எழுதவில்லை.

இப்படிக் கருவிலே திருவுற்ற தமிழ்க் கவிஞராய்ப் பிறந்து பாரதியார் செய்த சீரிய தமிழ்த் தொண்டுகள் எல்லாம், கருவும் உருவும் கொள்ளப் புதுவை புகுந்ததே காரணம் ஆயிற்று என்றால், "தமிழன்னையே அவரைப் புதுவை புகுமாறு செய்தாள்," என்று நாம் முன்கண்ட முடிவில் என்ன ஐயம் இருக்க முடியும்! இந்நிகழ்ச்சிகளால், நம் கவிஞரை ஒரு கருவியாகக் கொண்டு, தமிழன்னையே தன் குறை நீக்கிக் கொண்டாள் என்னும் உண்மை காண்பது எவருக்கும் இயலும் என்றே கருதுகிறேன். தேசத் தொண்டராயிருக்க வேண்டிய நம் கவிஞரைத் தெய்வப் புலவராகப் புதுவை திருப்பிக் காட்டிற்று என்ற கூற்றிலும் முழுவுண்மை இருப்பதை இந்நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு வலியுறுத்துகின்றன!

1911-ஆம் ஆண்டில், மணியாச்சி இரயில் வண்டி நிலையத்தில், கொலை நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. தூத்துக்குடிக் கலெக்டர்—ஆஷ் துரை மகனார் — சுட்டுக் கொல்லப்பட்டார். போலிசார் அதனைப்பற்றிப் புலன் விசாரித்தனர்; "ஆஷ் கொலையின் சதிக் கூட்டம், வ. வெ. சு.

ஐயர், அரவிந்தர், பாரதியார் ஆகிய இவர்களது தலைமையின்கீழ்ப் புதுவையிலேயே உள்ளது,'' என்று முடிவு கட்டினர். உண்மையிலே, நம் கவிஞர் அத்தகைய இழிசெயல்களில் ஈடுபடுபவர் அல்லர். அப்போது அவர், 'பாலபாரத'ப் பத்திரிகையில் இம்மிருகச் செயலான குண்டுவீச்சினைக் கண்டித்து மறுத்தே எழுதினர். "இந்த வெடிக்காய் வியாபாரம் நமது நாட்டிற்கு என்றும் ஏற்றது அன்று,'' என்பது, நம் கவிஞரின் மறுப்பு. ஆயினும், அவரைப் பல இடர்கள் சூழ்ந்தன: போலீஸ் ஒற்றர், நம் கவிஞரின் வீட்டினை எப்பொழுதும் முற்றுகை இட்ட வண்ணமாய்க் காத்துக்கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் எல்லையில், கவிஞரின் நெருங்கிய உறவினர் பலர், சிறை செல்லவும் நேர்ந்தது. பாரதியார் நண்பர்கட்கு எல்லாம், அரசாங்கத்தால் கட்டும் காவலும் விதிக்கப்பட்டன. உறவினரும் அன்று முதல் பாரதியாரோடு மட்டும் அன்றி, அவர் குடும்பத்தாரோடுங்கலந்து பழகப் பயந்து விலகினர். எப்படியாவது, இம்மூவரையும் பிரெஞ்சு எல்லையை விட்டு வெளியேற்றிக் கைது செய்து விடப் போலீசார் நினைவு கொண்டனர். நயத்தாலும் பயத்தாலும் பாரதியாரைப் பிடிக்க அவர்கள் செய்த சூழ்ச்சிகளோ, சொல்லித் தொலையா! போலீசார் ஒரு சமயம்—பாரதியார் இல்லாத சமயம்—வீட்டில் புகுந்து, 'கள்ளச் சோதனை' இட்டனர். 'சின்னச் சங்கரன் கதை' என்ற அரிய நூல் ஒன்று அவர்கள் கையிலே சிக்கி, நமக்குப் பயனின்றிப் போனதுதான்

சோதனையாற்கண்ட பலன்!

போலீசார் முதலிலே, பிரெஞ்சு கவர்னரிடம் சென்று அவர்களை அரசாங்க விரோதிகள் என்று சொல்லி, வெளியேற்ற முயற்சி செய்தார்கள். கவர்னர், 'தக்க ஆதாரம் இல்லை,' என்று சொல்லி, அதனை மறுத்துவிட்டார். பின்பு, அரசியலார், அந்நியர்களுக்குக் குடியிருப்பு உரிமை இல்லை என்று சொல்லும் சட்டம் ஒன்றைச்செய்யுமாறு கவர்னரைத் தூண்டினர். அதிலே, "சட்டம் நடைமுறையில் வரும் தேதிக்கு முன்னால், ஓர் ஆண்டாகக் குடியேறியிருப்பவர்கள், ஐந்து மாஜிஸ்திரேட்டுகளின் கையெழுத்துத் தந்தால் இதிலிருந்து விலக்குப் பெறலாம்," என்ற உட்பிரிவு ஒன்று இருந்தது. அதை வைத்து நம் கவிஞர் கலவல சங்கரஞ் செட்டியார் என்ற நண்பரின்மூலம், ஐந்து மாஜிஸ்திரேட்டுகளிடம் கையெழுத்து வாங்கி வந்தார். இம்முயற்சியால், ஐயர், அரவிந்தர், பாரதியார் ஆகிய மூவருமே சட்டத்தின் கொடுமையினின்று தப்பினர். பின்னர், மற்றொரு பெருந் தொல்லை நேர்ந்தது: "இந்தியப் பிரெஞ்சுப் பிரதேசங்களைப் பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்துக் கொண்டு, அவற்றிற்கு மாறாக, மேற்கிந்தியத் தீவுகளை அவர்கட்குக் கொடுத்துவிடுவது," என்ற நிலப்பரிவர்த்தனை முறையை மேற்கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் முயன்றது. இறையருளால், பின்பு அதுவும் தடைப்பட்டது. இப்படிப் பல தொல்லைகள் ஒன்றை ஒன்று அடுத்து வந்தன. நம் கவிஞரோ, 'அஞ்ச

வருவதும் இல்லை,' என்ற மனத் துணிவுடன் காலம் தள்ளினர். எனினும், நாட்செல்லச்செல்லப் புதுவை வாழ்க்கையிலும் அவருக்கு மனம் கசந்தது. அவரால் தன் பணி முற்றுவித்துக் கொண்ட தமிழன்னையும் அவரை வேறு வழியில் திருப்ப மனம் கொண்டாள்.

அப்போது நடந்த பெரும்போரின் முடிவில் இந்திய நாட்டிற்கு நன்மை வரும் என்றிருந்த நம் கவிஞரின் எண்ணத்திலும் மண் விழுந்தது. இத்தனை சூழ்நிலைகட்கு இடையில், சென்னையில் சுதேசமித்திரன் ஆட்சிப் பொறுப்பை **அரங்கசாமி ஐயங்கார்** ஏற்று நடத்த ஆரம்பித்தார். அரசியற்கலப்பில்லாத கட்டுரையும் கவிதையும் தரும்படி நம் கவிஞரை அவர் வேண்டினர். அதன்படி, கவிஞரும் செய்து உதவினர். ஐயங்கார் அவர்கள், பாரதியார் எழுதினாலும் எழுதாவிட்டாலும் மாதா மாதம் ரூபாய் முப்பது தந்து உதவினர். இத்தொகை, ஓரளவு பாரதியாரின் வறுமையைப் போக்கிற்று. இப்படி உதவியை 1914-ஆம் ஆண்டு தொடங்கியே நம் கவிஞருக்கு அவர் செய்து வந்தார். அக்காலங்களில் தேசியக் காங்கிரசின் சரித்திரத்தைப் பற்றிச் சுமார் ஐம்பது அத்தியாயங்களில் நம் கவிஞர் எழுதி வெளியிட்டார் ; 'ஜீவ வாக்கு' என்ற பெயரால், ஜகதீச சந்திர வசு என்பவர் செய்த தாவரநூல் நுணுக்கம் பற்றிய உண்மைகளைத் தமிழில் மொழி பெயர்த்து உதவினர். ஆங்கிலத்தில் இருந்த கவிஞர் தாகூரின் சிறுகதைகளைத் தமி

ழிலே பெயர்த்துத் தந்தார். நகைச்சுவை மிக்க சிறு கதைகளும், கற்பனை மிக்க கட்டுரைகளும் அடிக்கடி பாரதியார் பெயரால் மித்திரனில் வெளி வந்தன. பாரதியார் செய்த மொழி பெயர்ப்புக்களை எல்லாம் பார்த்த பேரறிஞர் பலர், அவரைப் பலபடப் போற்றிப் புகழ்ந்தனர். "பாரதியாரின் மொழிபெயர்ப்பு முதல் நூலாகத் தோன்றுகிறதே அன்றி, மொழி பெயர்ப்பு என்று சொல்ல இயலாது," என்பது அன்னார் கூறிய புகழுரை ஆகும்!

புதுவையில் பட்ட தொல்லைகளுக்கு இடையிலே இவை எல்லாம் அவருக்கு ஓரளவு மகிழ்ச்சி தந்தன. போரின் முடிவால் நன்மை விளையும் என்று கருதிய அவரது எண்ணம் பொய்த்தது. அதன் பயனாய் அவருக்குப் புதுச்சேரி வாழ்விலே மனம் கசந்தது. மேலும், தேச பக்தரான நம்கவிஞரைத், தெய்வ பத்தியும் வைராக்கிய உறுதியும் கொண்ட சித்த புருஷராக மாற்ற நினைவு கொண்ட தமிழன்னையின் திருவுள்ளம் அவரை அத்துறையிலே நாட்டங் கொள்ளத் தூண்டிற்று. இவை யாவும் ஒன்று சேர்ந்து, வரகவியின் மனத்தில் நாட்டன்பினை மீண்டும் கால்கொள்ளச் செய்தன. பிறந்த நாட்டை விட்டுச் சிறைக்குப் பயந்து வேற்று நாட்டிலே மடங்கிவாழ்வது—என்னதான் இருந்தாலும் நல்லதன்று என்ற எண்ணம் அவரிடம் ஓரளவு வலுப்பெற்றது! அவர், "எப்படியும் புதுவையை விட்டு நீங்குவது," என்று உறுதி கொண்டு, அரங்கசாமி ஐயங்காரை அனுமதி கேட்டார். அவரும், "இது தக்க நேரம்; செய்யலாம்," என்று சொல்லவே, 1918-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கவிஞர் தாமாகவே பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

VI கடையம் திரும்புதல்

பாரதியார், புதுவையை விட்டு நீங்கி வரும் போது அவர் மனைவியாரும் மைத்துனரும் உடன் வந்தனர். புதுச்சேரி எல்லையைத் தாண்டியதும், கூடலூரில் போலீசார் பாரதியாரைக் கைது செய்து, கூடலூர்ச் சிறையில் காவலில் வைத்தனர். கவிஞர் செய்த குற்றம் ஒன்றும் இல்லை. ஆதலின், கைது செய்த அதிகாரிகளை அவர் காரணம் கேட்டார். 'மேலதிகாரிகளின் உத்தரவு அப்படி,' என்றுதான் அவர்களாற் சொல்ல முடிந்தது. பாரதியாரைப் பிரிந்த குடும்பம், அவர் நண்பரும் சிறந்த வழக்கறிஞருமான துரைசாமி ஐயர் அவர்கள் ஆதரவிற் சென்னையில் சில நாட்கள் தங்கியிருக்க நேரிட்டது.

நம் கவிஞர் கைதியானது சுதேசமித்திரன் ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காருக்குத் தெரிய வந்தது. அவர் கவிஞரை விடுவிக்க முயன்றார். போலீஸ் மேலதிகாரியிடம் சென்று, பாரதியாரைப் பற்றிய உண்மை விவரங்களை அவர் அறிவித்தார்; பாரதியாரின் உடல் நலம் சீர் கெட்டிருப்பதை எடுத்துக் காட்டி, விடுதலை வேண்டினார். "அவர் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே

இருத்தல் வேண்டும். தவறினால், போலீஸ் கண்காணிப்புக்கு உட்பட நேரும். தீவிரமான அரசியலில் சிறிதும் பங்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது," என்னும் சில அடிப்படை ஒப்பந்தங்களின் மேல் கவிஞரை வெளி விடப் போலீஸ் அதிகாரி இசைந்தார். இப்படி விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்துகொண்டிருக்கும்போதே, சென்னை அரசாங்கம் பொதுவாக இம்மாதிரியுள்ள தடை உத்தரவுகளை நடைமுறையிலிருந்து நீக்கிவிட்டது. எனவே, கவிஞர் விடுதலை அடைந்து, குடும்பத்துடன் நேரே கடையம் வந்து சேர்ந்தார். இம்முறையும் சுதேசமித்திரன் அரங்கசாமி ஐயங்கார், "உங்களுக்கு எப்போதும் போல மித்திரனில் இடம் உண்டு," என்று சொல்லியனுப்பி, கவிஞருக்குப் பொருள் ஆதரவும் தந்து வந்தார். கடையத்திலிருந்தே கவிஞர் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதி மித்திரனுக்கு அனுப்பி வந்தார்.

கடையம் என்பது, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; இயற்கைக் காட்சிகள் பல நிறைந்து, கண்கவரும் வனப்புடையது. பக்கத்திலே மலை—இருமருங்கும் விரிந்தபொழில்கள்—இடையே சலசலத்தோடும் ஆறு—கண் கண்ட மட்டும் பசிய காட்சியளிக்கும் பசும்புற்றரை-ஆற்றருகே தட்டப் பாறை-நல்ல நீர்ச்சுனைகள்-கல்யாணி அம்மன் கோயில்-வாசகிரிமலை—அதன்மீது முருகர் விநாயகர் இவர்களது ஆலயம்—பெருந்தவ முனிவர்கள் இருப்பிடம்-இவை எல்லாம் பெற்றுக் கடையம் இயற்கைத் தேவி

யின் குடியிருப்பு என்று சொல்லும்படி அழகு வாய்ந்திருந்தது. நம் கவிஞருக்குப் புதுவையி லேயே குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப் பாணத்துச் சாமி என்னும் சித்தர்களுடைய நட்பு ஏற்பட்டது. அவர்கள் கவிஞரது பக்குவ நிலை உணர்ந்து, அவருக்கு ஞானோபதேசமும் செய் திருந்தார்கள். வேதாந்த நாட்டமும் சத்தி வழி பாடும் பாரதியாருக்கு அங்கு ஏற்பட்டன என்ற செய்தியும் நமக்குத் தெரியும். கட்டிளங்காளை யாய்ச்சென்ற நம் கவிஞரைப் புதுவை ஒரு துறவி யாக்கித் திருப்பித்தந்தது! இங்கிலையிலே, திரும்பி வந்த பாரதியாருக்குக் கடைய வாழ்க்கையும் இயற்கைச் சூழ்நிலையும் மனத்திற்குப் பெருமகிழ் வளித்தன. ஆதலின், அவர் மனம் பொருந்தி இரண்டாண்டுகள் இங்கேயே தங்கிக் காலம் கழித்தார்.

கவிஞர் காலையும் மாலையும் வீட்டில் இருப்ப தில்லை; ஊர்ப்புறம் உள்ள சோலைகளிலும், மணற் பாறையிலும் சென்று உலவி வருவார்; கல்யாணி அம்மன் கோயிலிலே சென்று மனம் உருகிப் பத்தி வயப்பட்டு நிற்பார். கதிரவன் தோற்ற மும் மறைவும் அவர் மனத்தைக் கொள்ளை கொண்டுவிடும். பல வேறு இயற்கைக் காட்சி களில் ஈடுபட்டு, அவைகளைக் குறித்து மெய்ம் மறந்து பாடுவார்; ஓடும் ஆற்று நீரிலே மிதந்து செல்லுவார். நீந்தியும் அகமகிழ்வார்; முன்னும் பின்னுமாக நீந்தும்போதே பாடல்கள் பல வெளி வரும். இயற்கையிலே கடவுட்காட்சியினைக் கண்டு திளைப்பார். அடிக்கடி 'ஆசனப் பயிற்சி

கள்' செய்யும் பழக்கமும் அவருக்கு உண்டு. அத ஞல், அவரது பொன்னிறமான மேனி கருகி, மங் கலாயிற்று! தாடியும் மீசையும் கூடிய முகத் தோடு நெற்றியில் நாமமும் தரித்து, அவர் ஒரு சித்தரைப் போலவும் துறவியைப் போலவும் அக்காலத்தில் காட்சியளித்தார் என்று சிலர் சொல்லுவதுண்டு.

சுதேச மித்திரனுக்குக் கட்டுரைகள் எழுதி உதவினதால், அப்போதும் சிறிது பொருள் வரு வாய் வந்தது. ஆனால், அவர் எண்ணங்களை ஈடேற்ற அவ்வருவாய் போதுமானதாய் இல்லை. 'கலா நிலையம் ஒன்று நிறுவி, அதன் மூலம் சீரிய தமிழ்ப்பணி பல புரிய வேண்டும்,' என்பது அவ ரது நெடுநாளைய ஆவல். அதற்கெல்லாம் அந்த வருவாய் எப்படிப் போதும்! அவர் எதிர் பார்த்தபடி, வேறு வழியில் இடவசதியோ, அன்றிப் பொருள் வசதியோ ஏற்படவில்லை. மக்கள், ஆங்கிலத்திற்கு அடிமைகளாய் அதிலே பெருங்காதல் கொண்டிருந்தார்கள். உலகப் பெரும்போர் முடிந்தும், நாட்டின் பொருளா தார நிலை அன்று சீர்படாமல் இருந்தது. கலை யுணர்ச்சி நாட்டில் அப்போது இன்றிருக்கும் அளவுகூட இல்லை. இந்நிலையிலே தமிழ் வளர்ச்சி குறித்துப் பாரதியார் தமிழருக்குச் சொன்னவை யெல்லாம் பலன் தரவில்லை. எனவே, அவரும் அம்முயற்சியைக் கைவிட வேண்டுவது ஒழிய வேறு வழி இல்லை என்று கண்டார். அவர் நினைவு பலிக்க அன்று தமிழர் முயன்றிருந்தால், தமிழ் இன்று எத்தனையோ துறைகளில் முன்

அணியில் நின்றிருக்கும்! 'கடவுள் தமிழருக்கு நிலபுலம் செல்வம் எல்லாம் வைத்தும் புத்தியை வைக்க மறந்தான்!' என்று பாரதியார் பிற்காலத்தில் மனம் உளைந்து எழுதியிருப்பது, எவ்வளவு பொருத்தமானதாய்க் காண்கிறது பாருங்கள்!

பத்தி என்பதும் ஒரு வகைப் பித்து. "நான் எவருக்கும் பித்தன் என்றால், உலகிலுள்ள யாவரும் எனக்குப் பித்தர்களே," என்று பத்திமான் ஒருவர் சொன்னார். பத்தரிடமும் மாறுபட்ட சில குணங்குறிகள், பித்தரிடம் உள்ளன போலத் தோன்றும். புதுவை நீங்கி ஞானியராய் வந்த நம் கவிஞர், தாம் கண்ட சில கவிக் கனவுகளை உருவாக்க முயன்றார். புது உலக அமைப்பிற்கு அவை இன்றியமையாத் தேவைகள் என்பது அவருக்குப் பட்டது. "ஒவ்வொரு மனிதனுக்கும் தன் இச்சைப்படி எண்ணி நடக்க முழு உரிமை உண்டு; சாதி சமய வேறுபாடு நீங்கின சமுதாயம் உருவாக வேண்டும். மூடப் பழக்க வழக்கம் முளை காட்டலாகாது. ஓரின உணர்ச்சியுடன் மக்கள் எவரும் கலந்து பழகுதல் நல்லது; தீண்டாமை பெரும்பாவம்; ஆணும் பெண்ணும் சரி நிகராக முன் நோக்கிச் செல்லுதல் வேண்டும்; எல்லாருக்கும் இயற்கை இன்பம் பெறவும், அழியா அமரத் தன்மை பெறவும் ஆசை இருத்தல் வேண்டும்; தமிழ் வளர்ச்சிக்கு ஒரு கலை மாளிகை கட்டுதல் வேண்டும்," என்பன அவர் கண்ட புத்துலகக் காட்சிகள் ஆகும். இவற்றை எல்லாம் நடை முறை

யில் மேற்கொண்டு நடத்தும் மனத்துணிவும் அவருக்கு இருந்தது. கூடுமான வழிகளில் எல்லாம் இவைகளை நடைமுறையில் மேற்கொண்டார்.

இந்த மனத்துணிவு, அவரை ஒரு பெரிய சீர்திருத்தக்காரராகக் காட்டிற்று. கடையமோ, நாகரிக நாட்டமே இல்லாத பிற்போக்குவாய்ந்த ஒரு சிறிய கிராமம். மீசை தாடியுடன் கூடிய அவரைக் காண்பதிலேயே ஊராருக்கு வெறுப்புத் தட்டிற்று. அவர் பக்கத்துக் கிராமத்திலுள்ள ஆதித்திராவிடச் சிறுவர்களோடு கலந்து பழகவும் - உண்ணவும் - இடையிலே நாலுமுழ வேட்டி கட்டவும் ஆரம்பித்தார்; மாலை நேரங்களில் மனைவியாரோடு கைகோத்து வீதிவழியே உலாவச் சென்றார்; 'பொட்ல புதூர்' முஸ்லீம் சகோதரர்களிடம் சென்று அவர்கட்குக் 'குர்-ஆன்' உபதேசமும் செய்து வந்தார். நாடார் வகுப்பினைச் சார்ந்த நாராயணன் என்பவரோடு உயிர் நேயம் பூண்டு, வேற்றுமை இன்றிக் கலந்து பழகினர். இப்படிப்பட்ட புரட்சிகரமான மாறுதல்களை வியந்து ஏற்றுப் போற்றும் மனப்பான்மை அந்நாளைய கடைய மக்களிடம் இல்லை. சிலர், 'பித்தன்!' என்று அவரை ஏசினர் சிலர், 'இவர் குடும்பத்துடன் நாம் கலத்தல் ஆகாது,' என்று சொல்லிச் சமூகத்துறவு செய்துவிட்டனர். இதை நம் கவிஞர் பொருட்படுத்தவே இல்லை. அவர் கேட்பாரற்ற நடுத்தெருவில் நின்று, சாகாதிருக்கும் வழி பற்றி மணிக்கணக்கில் பேசித் தீர்ப்பார்.

இயற்கை வேறு; கடவுள் வேறு,' என்ற காட்சியின்றி, 'காண்பன எல்லாம் கடவுள்,' என்று அறியும் அறிவினையே மேலான அறிவு என்பர் ஆன்றோர். அதுவே, 'ஆன்மஞானம்' எனப்படும். பற்றறத் துறந்த யோகியரிடம், இவ்வறிவு ஒன்றே தலை எடுத்து நிற்கும். 'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி,' என்று கடவுளை நோக்கி அடியார் ஒருவர் பேசினார். 'நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்று ஓராதார் கற்கின்றது எல்லாம் கடை,' என்று மற்றொரு திருமாலடியார் சொன்னார். நம் கவிஞர் பாரதியாரிடமும் அவ்வறிவு நலம் தலையெடுத்து நின்றது. 'தின்ன வரும் புலியினிடத்திலும் நாம் பகைமை பாராட்டலாகாது. அதனிடமும் அன்புருவான நம் ஈசன் வளர்கின்றான்,' என்ற கொள்கையினை அவர் நடைமுறையிலே மேற்கொண்டு நடந்தார். 'காக்கை குருவி எங்கள் சாதி: கடலும் மலையும் எங்கள் கூட்டம்: நோக்கு நோக்கக் களியாட்டம். பார்க்கும் இடம் எங்கும் நாமன்றி வேறில்லை,' என்ற சிறந்த வேதாந்த உண்மையினைப் பரப்பிய ஆன்மஞானி அல்லரோ அவர்!

கவிஞர் ஒரு முறை திருவனந்த புரம் சென்றிருந்த போது மிருகக் கண்காட்சிச்சாலைக்குப் போயிருந்தார்; எல்லா மிருகங்களையும் கையினால் தொட்டுப் பார்க்கத் தொடங்கினார். அருகிலிருந்தவர் தடுத்தும் அவர் கேட்கவில்லை. 'சிங்கத்தையும் புலியையும் மட்டுமாவது தொட வேண்டா,' என்று காவற்காரனே சொன்னான். கவிஞரோ, 'நீ மிருக அரசன்: நான் ஒரு கவியர

சன். உன்னைக் காண வந்திருக்கிறேன். நீ உன் கர்ச்சனை மூலம் அன்பினை எனக்கு அறிவி,' என்று சொல்லி, சிங்கத்தைத் தடவிக்கொடுத்தார். உடனே அது கர்ச்சனை செய்து தன் ஆர்வத்தைத் தெரிவித்தது.

பல தடவைகளில் அவர் தமக்கென்று தயாரித்து வைத்த உணவுகளைப் பக்கத்திலுள்ள காக்கை குருவிகளை அழைத்து உண்ணச் செய்வாராம்! இவ்வளவு மேலான தயவுள்ளம் படைத்த அவருக்கு உலகிலே பகை எப்படி இருக்க முடியும்? எல்லாரையும் உற்ற உறவினராகவே அவர் கருதிப் பாராட்டினர்.

புரட்சிகரமான வாழ்க்கை மாறுதலை அவரது கடைய வாழ்விலே நாம் காண்கிறோம். ஒரு சமயம் அவர் எட்டையபுரம் சென்றிருந்தார்; மன்னரிடம் சிறிது பொருள் வேண்டிச் 'சீட்டுக் கவி' ஒன்று எழுதி அனுப்பினர். சீட்டுக்கவி எழுதுவது புலவர்களது பழையமுறை; ஆனல், இவர் கவிதையிலே புது ஒளி வீசிற்று; அடிமை உணர்வில்லை; ஆண்மை உள்ளம் தெரிந்தது. 'கொடு,' என்ற இழிந்த பேச்சில்லை; 'அனுப்பு' என்ற அதிகார தோரணை இருந்தது! பழம்புலவர் பேசி வந்தபடி வீண் புகழ்ச்சியும் கெஞ்சுதலும் அதிலே இல்லை. அது கவியரசன் புவி அரசனிடம் கப்பம் கேட்பது போல இருந்தது. "எட்டப்ப பூபதிக்குக் கவிராஜன் பாரதி விடுத்த ஓலை இது. கற்கண்டு சுவைக்கும் குழந்தையை ஒத்து நீயோ தமிழ்ச் சுவை அறிபவன். நான் உன்பால் சுவை மிக்க தமிழ் கொண்டு வந்து

தந்திருக்கிறேன். நான் எளியவன் அல்லேன்; கவி மன்னன். என் கவி புகழ் மிக்கது. சுவை-பொருள்-வளம் எல்லாம் சிறந்து ஓங்குவது; என்றும் அழியாப் புதுமைக்கவி. என் வாக்கினை ஆங்கிலேயர் கூடப் புகழ்கின்றனர்! நீ என் கவி கேட்டுப் போற்றி வெற்றி முரசுடன் போர்வை, பொற்பதக்கம், பல்லக்கு, குதிரை எல்லாம் பரிசளித்துப் பெருமை பெறுவாயாக!" என்னும் கருத்துடன்கூடிய பாடலைக் கேட்டும் வியந்துங் கூட மன்னர் பொருளுதவி செய்து அவரை ஆதரிக்க முன்வரவில்லை. அதற்குக் காரணம், கவிஞர்மீது அன்பின்மை அன்று; அரசாங்க பயம்!

பாரதியார் உயரிய நாட்டன்பு கொண்டவர். எனினும், அந்நாட்டன்பு அவரது இனவுணர்ச்சியைக் குலைத்துவிடவில்லை. தேசியத்தின் பேரால் பிறமொழி ஆதிக்கம்—பிறர் பண்பாட்டுக் கலப்பு—இவற்றிற்கு இடங்கொடுத்து அழியும் அடிமைத் தொழிலை அவர் பேணியதில்லை. 'உலகமக்கள் எல்லாருமே ஓரினம்,' என்ற விரிந்த மனப் பண்புடையரேனும், 'உலக ஒற்றுமைக்குத் தமிழும் தமிழினமும் பண்புஅழியாமல் தனித்துவளர்ச்சி பெறவேண்டும்,' என்ற ஆழமான கருத்தும் அவரிடம் வேரூன்றி நிலைத்திருந்தது. சுருங்கச் சொன்னால், தமிழ் மீதும் தமிழர் மீதும் அவர் கொண்ட தனிப்பெரும் பற்று ஒன்றுதான், நாளடைவில் சர்வதேசிய உணர்ச்சியை அவரிடம் வளர்த்தது என்னலாம்! தமிழின்மீதும் தமிழ் நாட்டின்மீதும் அவருக்கு இருந்த பேரன்பு, "தமிழும் தமிழ் நாடும் எந்த

வகையிலும் பிற நாட்டிற்கும் மொழிக்கும் பின்னிட்டனவல்ல,'' என்று எண்ணுமுணர்ச்சியைத் தூண்டிற்று. கவிஞருக்குச் சுவாமி விவேகானந்தர்மீது அளவிலாத ஆர்வம் உண்டு. அவரது அறிவுத்திறத்திலும்சொல்லாற்றலிலும் பெரிதும் கவிஞர் ஈடுபட்டார்; தாமும் அவரை ஒத்துப் பயின்று, வேதாந்தம்—கடவுள் உணர்வு—ஆன்ம ஞானம் முதலிய துறைகளிலே ஆராய்ந்து பேசி, 'தென்னாட்டு விவேகானந்தர்' எனப் பெயர் பெற்றுத் தமிழ் நாட்டின் தனிப்புகழை நிலை நிறுத்த வேண்டும் என்னும் ஆர்வம்' கொண்டார். திருநெல்வேலியில் பெரிய சபை கூட்டி வைதிக சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய சகல மதங்களையும் பற்றிப் பேச ஆர்வம் கொண்டு, கூட்டங்கட்கு ஏற்பாடு செய்தார்; செய்தும், கலெக்டர் பேச அனுமதி தரவில்லை. பாரதியார் மனம் உடைந்து போனார். அது குறித்துத் தாமே நேரில் சென்று கலெக்டரைக் கண்டும் பேசினார். ஒன்றாலும் பயனில்லை. பின்பு செட்டி நாடு போயிருந்த போது அவர் நினைத்த கருத்துப்படி, 'காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்திலே' தொடர்ந்து பல சமயச் சொற்பொழிவுகளைச் செய்தார்; அதில், இந்து மதத்தின் பெருமைகளை நல்ல முறையிலே எடுத்து விளக்கினார்; அரவிந்தரின் நூல்களிற்காணும் அமரநிலை, தேவவாழ்க்கை, கிருதயுகம் முதலியவற்றின் அருங்கருத்துக்கள் செறியப் பேசினார். "உட்பொருளாயும் அறிவொளியாயும் இலங்குவது பரம்பொருள். அதனை ஒவ்வொருவரும்

அகத்தில் ஒன்ற வைத்து, நினைவும் செயலும் அதுவேயாக மாற வேண்டும். அச்சம், கவலை, சினம், பொய் முதலிய கெட்ட பேய்க்குணங்களை அறிவு என்னும் வாளால் அறுத்துத் தள்ள வேண்டும். இங்ஙனமாகிய அருள் வாழ்க்கையை மேற்கொள்பவராலேயே அமரநிலை பெற முடியும். அவர்கள் தாங்களும் இன்பவாழ்க்கை வாழ்ந்து, நாட்டிற்கும் நலம் புரிவார்கள். இதுவே வேத உண்மை—இந்து மத சாரம்,'' என்ற ஆழ்ந்தகன்ற கருத்தை எல்லாம் சின்னஞ்சிறு மணி வாசகங்களால் செப்பிலிட்டது போல அடக்கி அவையில் விளக்கினுர். கேட்ட பலரும் அச்சொற்பொழிவுகளை வெகுவாகப் பாராட்டி, 'மற்ருெரு விவேகானந்தரே இவர்!' என்று போற்றினராம்! செட்டி நாட்டார் மெச்சியதுடன் மணி இழைத்த பொற்பேனுவும், நல்ல வேலைப்பாடு மிக்க பணப் பேழையும் அவருக்குப் பரிசு தந்தும் பாராட்டினர்.

ஒரு முறை, வங்கநாட்டுக்கவிஞர் இரவீந்திரநாத தாகூர் மதுரைக்கு வந்திருந்தார். நம் கவிஞர் அப்போது நெல்லையில் தங்கியிருந்தார். தாகூரின் மதுரை இருப்புப் பாரதியாருக்குத் தெரிந்தது. உடனே அவர் தம் அருகிலிருந்த நண்பரை நோக்கி, "மதுரைக்குப் புறப்பட வேண்டும்; இரயிலில் சீட்டு வாங்கு," என்ருர். நண்பர், 'எதற்கு?' என்று கேட்டாராம். "நான், தாகூரோடு பேசி வென்று அவர் பெற்ற நொபெல் பரிசைத் தமிழுக்குப் பெற்றுத் தரவேண்டும்," என்று உடனே பதில் தந்தார்

நம் கவிஞர். "அஃது எப்படி இயலும்?" என்ற அன்பருக்கு, "நாம் சென்று தாகூரிடம் ஒன்று சொல்லுவோம்: 'நீர் வங்கக் கவிஞர்; நான் தமிழ்க் கவி. விக்டோரியா ஹாலில் கூட்டம் கூட்டுவோம். உமது நோபெல் பரிசை சபை முன்பு வையும். இருவரும் பாடுவோம்! எனது பாட்டையே சிரியதெனமெச்சுவார்கள். உமது கையாலேயே அப்பரிசிலை எடுத்துத் தரவேண்டும்,' என்போம்," என்று பதில் கூறினர். அருகி லிருந்தவர், "அஃதெப்படி முடியும்? நீர் தமிழில் பாடுவீர்; அவர் வங்கத்தில் அன்றோ பாடு வார்?" என்றாராம். உடனே நம் கவிஞர், "அட சனியனே! கடவுள் தமிழனுக்கு எல்லாம் வைத்தான்; புத்தியை மட்டும் வைக்கவில் லையே! தமிழுக்கு ஏன் நோபெல் பரிசு தரக் கூடாது? தமிழனே தமிழைத் தாழ்வாக மதிக் கலாமா?" என்று ஆத்திரத்துடன் பேசி னாராம். இப்படித் தம் தனிப் பண்பு அழியாது போற்றி வளர்க்கும் உத்தமர்களிடம் அல்லவா உண்மைத் தேசபத்தி ஒளிரும்! நம் கவிஞரின் இவ்வுத்தமப் பண்பு, இந்நாளைய நாட்டுத் தலைவர் களுக்கு நல்ல வழி காட்ட வேண்டும்.

பாரதியார் பிறவிக் கவிஞர். போதுமான தேசியச் சிந்தனையை அவருக்கு அக்கால அரசி யற்சூழ்நிலை உண்டாக்கிற்று. புதுவை, அவரது கவிதை உள்ளத்தை உரமிட்டு வளர்த்து, அவரை யோகியாகவும் ஞானியாகவும் மாற்றி, வெளி விட்டது. கடைய வாழ்க்கையோ, அது வரை கண்டுணர்ந்த உண்மைகளையும் கொள்கை

களையும் நடை முறையிலே மேற்கொண்டு ஒழுகி நாட்டாருக்கும் நல்வழி காட்ட உதவும் ஓர் சுரங்கமாயிற்று. அவரிடம் கண்ட புரட்சிப் பெரும்புயல்கள் கடைய வாழ்க்கையில் இங்ஙனம் ஒவ்வொரு துறையிலும் வீசக் கண்டோம்! சமயம்— இலக்கியம்—அரசியல் — பொருளாதாரம்—எல்லாத் துறைகளிலும் கால் கொண்டிருந்த பழைய உளுத்த கொள்கைகளை உதறித் தள்ளி, புரட்சிக்கான வேறு திறக் கொள்கைகளைப் புகுத்தியவர் நம் பாரதியார்.

தமிழிலே நிகர் அற்ற தனிப் பெரும்புலவர் பாரதியார். எனினும், அவர் பழம்புலவர் சென்ற வழியிலே சென்று தமிழ் படித்தவரும் வளர்த்தவரும் அல்லர். புலவர்கள் தங்களது தனிச் சொத்தாகப் பேணிக்கொண்டிருந்த தனித்தமிழைப் பாமரர்கட்கும் பொதுவுடைமை ஆக்கித் தந்திட்ட முழுமுதற் கருத்தாவும் அவரே ஆவர். அகராதி பார்க்க வேண்டிய தேவை இல்லாதபடி எளிதிலே பளிச்சென்று யாருக்கும் பொருள் புலப்படும்படி, உணர்ச்சி தரும் வகையிலே தற்கால இலக்கியங்கள் அமைய வேண்டும் என்ற கருத்துடையவர். தமக்குப் பொருள் விளங்காத பாடல்களைப் பற்றி அவர் கவலை கொள்ளுவதில்லை. "பழம்பாடல்களில் பொருள் விளங்கவில்லை என்றால், அவை வேண்டா; எளிய இனிய புதுப் பாடல்கள் பாடுவோமே!" என்று நூற்றுக் கணக்காகப் பாடுவார். இப்படிக் கம்பரது நாட்டுப் படலப் பாடல்களிற்சில பொருள் விளங்காத நிலையிலே

தான், 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற புதுப் பாடலைப் பாடி, 'அது வேண்டா; இதனை வைத்துக்கொள்ளுவோம்,' என்று கூறினாராம்!

ஒரு சமயம் பாரதியார் கம்பரைப் படித்துக்கொண்டிருந்தார். பக்கத்திலே இருந்த பரலி நெல்லையப்பர் சில கவிக்கு அவரைப் பொருள் சொல்ல வேண்டினார். பாரதியார் இங்கும் அங்குமாகச் சில கவிகட்கு மட்டும் பொருள் சொல்லி, பல கவிகளைக் குறுக்குக் கோடிட்டு அடித்து விட்டார்; காரணம் கேட்ட போது, "கம்பர் இங்கே நமக்குப் பாடவில்லை. அவர் பூலோகத்தில் இல்லாதபடி ஏழாவது படி கடந்து நின்று பாடுகிறார். அவர் அறிவு பெரிது! ஒன்றுமே நமக்குப் புலனாகவில்லை!" என்று கூறினராம். பொருள் விளங்காத பாடலைப் பற்றிக் கவலைப் பட வேண்டா என்ற மனநிலை அவருக்கு இருந்தது உண்மை! என்றாலும், பழங்கவிகளை இகழும் மனப்பான்மை அவரிடம் இருக்கவில்லை. வரகவி பாரதியார், "கம்பர் அறிவு பெரிது! அது நமக்கு விளங்கவில்லை," என்பதைச் சொல்லும் போது, தமது குறையை உணர்ந்து அதனை எவ்வளவு நயமாகக் குறிப்பிடுகிறார் என்பதைப் பாருங்கள்!

ஒரு முறை எட்டையபுரம் சென்றிருந்த போது, பழைய தமிழாசிரியர் நம் கவிஞரைச் சந்தித்தார். "நீ பெரும்புலவன் என்பது இருக்கட்டும். நீ சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருக்குறள் போன்ற நூல்களை எல்லாம் படித்து மனப்பாடம் செய்திருக்கின்றாயா? தமிழிலே புலவ

ருக்கு அப்பயிற்சி இன்றியமையாதது அல்லவா?'' என்றார். அதற்குப் பாரதியார், ''நமக்கு வேண்டுவது புதுமை. பழைய தேங்காய் நடைப் புத்தங்கட்கெல்லாம் கோட்டைக் கிழித்துவிட்டோம்,'' என்று துணிவுடன் மறு கணமே பதில் சொல்லிவிட்டார். இதிலிருந்து பாரதியார் நூல்களைப் பயின்றவர் அல்லர் என்று பொருள் செய்யக் கூடாது! பயிற்சி பெற்றுச் சிறக்காவிட்டால், ''யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை,'' என்று எப்படி நயம்படப் பாராட்ட முடியும்? ''தமிழிலே பழைய நூல்கள் மிகுதியாய் இருக்கின்றன: பல நமக்குப் பொருள் விளங்கும் நிலையில் இல்லை. அதற்கான குறை பழம்புலவர்களிடம் இல்லை. தமிழை மறந்த நம்மிடமே உள்ளது. எனினும், பாமரருக்கும் பொருள் எளிதிலே விளங்கும் நவீன இலக்கியங்களே வருங்காலத் தமிழகத்திற்கு உடனடியான தேவை,'' என்ற புரட்சிகரமான கருத்தை உள்ளத்துக்கொண்டு, அதையே நன்கு வலியுறுத்திக் காட்டினார். இந்த அறிவின் திறந்தான், அவர் புலவருடன் பேசிய பேச்சில் நாம் கண்டுணர்ந்து மெச்சத் தகுந்தது!

கடைய வாழ்க்கையும் அவருக்குப் பிடிக்கவில்லை. இளமையில் சென்னையில் வாழ்ந்த சுகபோக நிகழ்ச்சிகள் அவரது நினைவுக்கு மீண்டும் வந்தன; ஆதலின், மீண்டும் சென்னைக்குப் போகக் கருதினார். கடவுள் அருளால் அவரது எண்ணமும் பலித்தது. சுதேசமித்திரனில் உதவி ஆசிரியர் பதவியை அளித்து அரங்கசாமி ஐயங்கார் பாரதியாரை மறுமுறையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

VII வாழ்வின் முடிவு

நம் கவிஞர் மீண்டும் சுதேசமித்திரனில் துணையாசிரியராய் அமர்ந்த காலம் 1920-ஆம் ஆண்டு என்பர். அவர் சுதேசமித்திரனில் அடிக்கடி சுவைமிக்க பல கட்டுரைகளை எழுதிவந்தார். அவை, பிற்காலத்துத் தனி நூல்களாய் வெளி வந்து யாவராலும் போற்றப்பட்டன. புதுச்சேரியில் நண்பர்களுடன் நிகழ்த்தின திண்ணைப் பேச்சுக்கள் யாவுமே இனிய எளிய தமிழில் கட்டுரை வடிவம் கொண்டு வெளி வந்தன. மித்திரனும் அவரை நன்கு பேணி, அவருக்கு எல்லாச் சுதந்தரமும் அளித்து வந்தது. நம் கவிஞர் எழுதுவதுடன் மட்டும் நிற்கவில்லை. திருவல்லிக்கேணிக்கோயில் மண்டபத்திலும், சென்னைக் கடற்கரையிலும் அடிக்கடி கூட்டம் கூட்டிக் குரல் எடுத்துப் பாடுவார்; தேசீய விஷயங்களை எடுத்துச் சொல்லி மக்களுக்கு உணர்ச்சியூட்டுவார்.

1920-ஆம் ஆண்டு அவருக்கு உகந்த ஒரு நல்ல காலம் என்றே சொல்ல வேண்டும். சுதேசமித்திரனில் வேலை கிடைத்தது; ஓரளவு நல்ல வருவாயும் வந்தது; மீண்டும் புதுவையில் பிரிந்த

நண்பர்களின் கூட்டுறவும் ஏற்பட்டது. தெளி சிங்கப் பெருமாள் கோயில் தெருவில் நல்ல மாடி வீட்டில் குடியிருப்பு வைத்துக்கொண்டார். பக்கத்தில் உள்ளவர்களின் அன்புடன் கூடிய ஆதரவும் கிட்டிற்று. இவை யாவும் கூடி, கவிஞர் வாழ்க்கையின் இறுதிக் காலத்திலே ஒரு புது ஒளி வீசுமாறு செய்தன. கவிஞர் தம் வாழ்க்கையின் புதிய ஒளி கண்டு மகிழ்ந்தார் என்றே சொல்ல வேண்டும்.

இச்சமயத்தில், வ. வெ. சுப்பிரமணிய ஐயர் சென்னை வந்து, 'தேச பக்தன்' பத்திரிகையை நடத்தினர். ஸ்ரீநிவாசாசாரியரும் அவர்க்கு உடன் இருந்து உதவி செய்தார். குவளைக் கிருஷ்ணமாசாரியார் என்ற அன்பரும், திருவல்லிக்கேணி வந்து, கோயில் மடைப்பள்ளியில் அமர்ந்து, அலுவல் பார்த்து வந்தனர். பாரதியாரின் பேரன்பிற்கு உரியவர்களாகிய சுரேந்திரநாத்து ஆரியா, துரைசாமி ஐயர் முதலியவர்களும் சென்னையில் இருந்தார்கள். நம் கவிஞர் அடிக்கடி சென்று அவர்களுடன் எல்லாம் அளவளாவி மகிழ்ந்து வந்தனர். 'ஒத்த அன்புடைய பலர் மனங்கலந்து பழகிப் பேசி மகிழ்வதிலும் பெறும் பேரின்பம் வேறு எங்குள்ளது? 'தேவருலகத்தில் சென்று நாம் பெறும் இன்பமும் அதற்கு ஈடாகாது,' என்று ஒரு கவிஞர் உயர்த்திப் பேசியுள்ளார். இத்தகைய பேரின்பம், நம் கவிஞரின் வாழ்க்கையிலே சென்னையிலேதான் அவருக்குக் கிட்டிற்று என்னலாம்! பிரிந்த நண்பர் பலரும் ஒன்றுகூடி மகிழ்ந்தனர்.

பாரதியார் இன்பவாழ்க்கையின் சூழலிலே சுற்றித் திரிந்தார்.

கவிஞர் பற்பல தேசியப் பாடல்களை எழுதி வெளியிட்டார்; அப்பாடல்களைத் தாமே பல இடங்களில் வாய் விட்டுப் பாடி வந்தார். அவர் தம் பாடல்கள், இனிய எளிய பதச் சேர்க்கையாலும், செவிக்கு இனிய ஓசை நயத்தாலும், புதுப்புது மெட்டமைப்பாலும், சீரிய கருத்து அமைதியாலும் பாமர மக்களைப் பணியச் செய்து நின்றன; ஏன்? தமிழறியாத பிற நாட்டு மக்களையும் பணி கொண்டன. அன்னி பெஸண்டு அம்மையார், நம் கவிஞரின் பாடல்கள் பலராலும் போற்றிப் பேசப்படுவதனைக் கண்டார். நேருக்கு நேர் படித்துச் சுவைக்க வேண்டும் என்ற விருப்பம் அம்மையாருக்கு எழுந்தது; ஆகவே, சில கவிகளை ஜேம்ஸ்-கஸின்ஸ் என்ற மற்றொருவரைக் கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்து படித்து மெச்சினர். இப்படிப் பிற நாட்டாரும் போற்றுமாறு பாடல் பல பாடிச் சென்ற நம் கவிஞரின் புலமை அல்லவா திறமான புலமை! 'திறமான புலமை ஒருவருக்கு ஒரு மொழியிலே இருப்பது உண்மை ஆனால், பிற நாட்டார் அதனை வணங்குமாறு செய்யவேண்டும்,' என்று பாரதியாரே சொல்லியுள்ளார். சொல்லியது பிறருக்கு மட்டும் அன்று; தாமே அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்து நின்றார்.

அச்சமயம், மகாத்துமா காந்தி அலி சகோதரர்களுடன் கூடி நாடு முழுவதும் கிலாபத்துப்

பிரசாரத்திற்குப் பயணம் செய்து வந்தார். அடிகளார் சென்னை வந்திருந்த நேரத்தில் நம் பாரதியார் நேரில் சென்று அவரைச் சந்தித்தார்; அவரோடு ஒத்துழையாமை, பொறுமைப் போர் போன்ற பல சிக்கலான அரசியற்பிரச்சினைகள் குறித்து விவாதித்தார். பின்பு இருவரும் தத்தம் கருத்தைப் பரிமாறிக்கொண்டனர். இறுதியில், "உங்கள் ஒத்துழையாமை இயக்கத்தை யான் வாழ்த்துகிறேன்!" என்று வாழ்த்துக் கூறி விடை பெற்றுச் சென்றார். நம் கவிஞர், 'வாழ்க நீ எம்மான் காந்தி!' என்று புகழ்ப்பா மாலையும் சூட்டினார். அப்போது அருகிலிருந்த தலைவர் ராஜாஜி நம் கவிஞரைக் காந்தியாரிடம் 'இவர் தமிழ் நாட்டுத் தேசியக்கவிஞர்,' என்று அறிமுகம் செய்து வைத்தார்.

நம் கவிஞரின் பிற்கால வாழ்வில் தெய்விக ஒளி மின்னி வீசலாயிற்று. இறுதிக் காலத்தில் கடவுள் வழிபாட்டில் ஈடுபாடு மிக உடையவரானார். எப்போதும் திருமாலது திருவெட்டெழுத்தை உச்சரித்து ஈடுபட்டுக்கொண்டே இருப்பதும் உண்டாம்! பத்தி மிகுதியால், பிரகலாத இரணிய சம்வாதமாகச் சில செய்யுட்கள் பாடி, அவற்றையே எப்பொழுதும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தார். தினமும் இரவில் கோயில் சென்று கடவுள் வழிபாடு புரிந்து வரும் வழக்கத்தையும் அவர் நெடுங்காலம் தவறாது மேற்கொண்டிருந்தார். பல தடவைகளில் பெருமாள் புறப்பாடு கண்டருளும்போது, நம் கவிஞர் பல்லக்குத் தாங்கி ஆண்டவனுக்குத்

தொண்டு புரிவதும் உண்டு.

கவிஞர் நாடோறும் வீடு திரும்பும்போது கோயில் யானையிடம் சென்று பழகுவார்; 'யானை நண்பன்' என்று அதனை வழங்குவார்; அதற்குப் பழம் தேங்காய் முதலியன கொடுத்து, அதனோடு உறவு கொள்ளுவார். 'காக்கை குருவி எங்கள் சாதி,' என்று சொன்ன அவர் யானையை நட்பாக்கிக்கொண்டது பின்னர் அவர் உயிருக்கே தொல்லை தருவதாயிற்று. என்ன இருந்தாலும் விலங்குதானே! 'வெம்பு கரிக்கு ஆயிரந்தான் வேண்டுமே,' என்றபடி நம் முன்னோர், 'ஆனையைக் கண்டால் ஆயிரம் அடி விலக வேண்டும்,' என்று ஆணை இட்டனர். ஆனால், அதனிடம் அன்பு கொண்ட பாரதியார், தினந்தோறும் அதன் அருகிலே சென்று அதனைத் தடவிக்கொடுத்துத் தமது அன்பின் பெருக்கினை வெளிப்படுத்தினார்.

அந்தக் கோயில் யானைக்கு ஒரு நாள் திடீரென மதம் பிடித்துவிட்டது. உடனே அதனை நான்கு கால்களிலும் சங்கிலியிட்டுப் பிணித்து வைத்திருந்தனர். விவரம் அறிந்த எவரும் அருகிலே போகவில்லை; வேலியின் புறத்தே நின்று தான் வேடிக்கை பார்த்தனர். வழக்கம் போலக் கோயிலிலே சென்று வழிபாடு செய்து திரும்பின நம் கவிஞர், 'யானை நண்பனிடம்' சென்றார். கூடியிருந்தவர் எல்லாரும், செய்தியைச் சொல்லி, "செல்ல வேண்டா!" என்று தடுத்தனர். நம் கவிஞர் கேட்கவில்லை. "என் நண்பனால் எனக்குத் தீங்குநேராது," என்று கருதினார்;

தேங்காய் பழங்களைக் கொடுத்தார். வாங்கி யுண்ட அவ்யானை, மக்கள் செய்த ஆரவாரத் தால் மிரண்டது; நம் கவிஞரைத் துதிக்கையால் தூக்கிப்போட்டுவிட்டது. யானையின் கால் களுக்கு இடையே நம் கவிஞர் விழுந்து குற்றுயி ராய்க் கிடந்தார். யானை மிதித்திருந்தால், அவர் அங்கேயே இறந்துபட்டிருப்பர்! நல்ல வேளை யாக, யானை அப்படி ஒன்றும் செய்துவிட வில்லை!

பாரதியாரின் அன்பர் குவளைக் கிருஷ்ணமா சாரியார் கோயிலிலே மடைப்பள்ளிவேலை பார்த் து வந்தார். பாரதியாரை யானை மிதித்த செய்தி அவருக்கு எட்டியது. அவர் ஓடோடியும் வந்தார்; தம் உயிரைத் துரும்பாக மதித்து, திடீ ரென உள்ளே பாய்ந்து, நம் கவிஞரை வெளியே தூக்கி வந்து விட்டார். பின்னர் ஸ்ரீநிவாசாசாரி யார், துரைசாமி ஐயர் முதலிய பல அன்பர்க ளும் செய்தி தெரிந்து களத்திற்கு விரைந்து வந் தார்கள். எல்லாரும் சேர்ந்து பாரதியாரை இராயப்பேட்டை மருத்துவ நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். சில நாட்கள் கழிந்ததும் அவருக்குக் காயம் குணப்பட்டது. ஆயினும், அந்நிகழ்ச்சி நேர்ந்ததிலிருந்தே உடம்பு மீண்டும் பழைய நிலைக்கு வந்து தேறமுடியவில்லை. உடல் முழுவதும் ஊமைக்காயம் கண்டிருந்தது; மரண வலியும் எடுக்கத் தொடங்கிற்று. அதனை அடுத்து, கவிஞர் மூன்று மாத காலம் நோய்வாய்ப்பட்டு வருந்தினர். இளமையிலே, 1921-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பதினொன்றும் நாள் இரவு

ஒன்றரை மணிக்கு நம் கவிஞர், பூதவுடல் நீத்துப் புகழ் உடம்பு எய்தினர். தாம் கருதிய கருமம் முடிந்ததும் வந்த வழியே திரும்பிச் செல்லுதல் ஞானிகள் இயல்பு. அவ்வியல்புக்குத்தக நம் கவிஞரும் தமிழ்ப்பணி பல முடித்து மறைந்தார். எனினும், தமிழ் உள்ள அளவும் அவர் பெயரும் நிலவும் வகையிலே அவர் செய்து சென்ற தொண்டுகள், அவரை ஒரு 'அமரகவி' ஆக்கின. அவர் அமரர்! தமிழர் மறப்பினும், தமிழ் மறவாது அவரைப் போற்றும்! அவர் பெயர் மங்காது என்றும் நின்று வாழ்க!

VIII இயற்றிய நூல்கள்

இலக்கியம், மக்கள் வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்பு உடையது; மக்கள் வாழ்க்கையினை உருவாக்கவும் வல்லது; நாட்டுநிலையை உயர்த்துதற்கு அமைந்தது. "மக்கள் வாழ்க்கையோடு இயைபுடையதாய், நாட்டு நிலையையும் அகவாழ்க்கையையும் உருப்படுத்தி உதவவல்லது எதுவோ, அதுவே உண்மை இலக்கியம் ஆகும்," என்று ஹட்ஸன் என்ற ஆங்கிலப் பேராசிரியர் கூறியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களைச் செம்மை பெறச்சொல்லி, அதன்மூலம் மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துதற்கு முயல்வனவே உண்மை இலக்கியம் என்ற உண்மையைநம்தமிழ்மக்களும் கண்டுணர்ந்து போற்றினார்கள். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே," என்பது பழந்தமிழ் நூல் விதி.

அப்படியானால், ஓர் இலக்கியம் சொல்லும் பொருளால் சிறந்து நிற்க வேண்டும் என்பது பெறலாயிற்று. இலக்கியத்தால் சுட்டப்படும் பொருள், காலத்திற்கேற்றவாறு மாறுதல்களை அடைந்து நிற்கும். மக்களுக்குக் கவர்ச்சியூட்

டும் பொருளும், அவ்வக்காலச் சூழ்நிலைகட்குத் தக்கபடி வேறுபடும். சங்ககாலத்தில், தமிழ் இலக்கியம் மேலோங்கி நின்றது. இடைப்பட்ட கால இலக்கியங்களில், 'சமயம்' மேலோங்கி நின்றது. ஆனால், அடிமை நாட்டில், 'நாட்டுப்பற்று, தேசியக் கருத்து' ஆகிய இவைகளே மக்கட்கு மிகுதியும் உணர்ச்சியூட்டி நிற்கும். ஆகவேதான் தற்கால இலக்கியங்களில் எல்லாம் தேசிய அடிப்படையிலே மற்ற எவற்றையும் கொண்டு வந்து புலவர்கள் பிணித்துப் பேச நாம் காண்கிறோம். இது காலத்தோடு பட்ட செய்தி ஆகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே நம் பாரதியார் தம் தேசியப் பாடல்களின் மூலம் நாட்டில் மறுமலர்ச்சி உண்டு பண்ணினார். மற்றைய சமயம் இலக்கியம் ஆகிய யாவுமே, தேசியத்திற்கு ஊறு பண்ணாத வகையிலே பேணப் பட்டிருப்பதை அவர் நூல்களில் நாம் காண்கிறோம். இப்படிக் காலத்தேவை உணர்ந்து பாடி மக்களை மகிழ்வித்த காரணத்தாலேயே, அவர் மக்களால் 'தேசீயக் கவி' என்று போற்றப்படுகிறார். உண்மைக் கவிஞனானால், காலநிலை ஒன்றாயிருக்க, வேறு வழியிலே பிரிந்து செல்லமுடியாது. "என்னைப் பலர் 'வேறு வகையான நூல்களைச் செய்,' என்று சொல்லுகின்றனர்! 'நாடக நூல் செய்,' என்கின்றனர் சிலர். சிலர், 'நீண்ட காவியம் செய்,' என்கின்றனர். ஆனால், என்னால் அவைகளை எல்லாம் செய்ய முடிவதில்லை. 'நாட்டு மக்களின் வறுமையும் பிணியும் நையப் பாடு,' என்று ஒரு தெய்வம் என்னுள்ளே நின்று கட்டளையிட்

டுச் சிந்தனையை வேறு போக்கிலே திருப்புகிறது!" என்று பாரதியாரே ஓரிடத்தில் கூறியுள்ளது கொண்டு இவ்வுண்மையினை நாம் நன்கு உணரலாம்.

இனி, இலக்கியத்திற்கு உள்ள பிறிதொரு சிறப்புச் 'சொல்லும் முறை' பற்றிய வடிவச் சிறப்பாகும். குறித்த ஒரு பொருளை எந்த முறையிலே அழகுபடப் பேசுவது என்ற செய்திகுறித்தே, 'நல்ல இலக்கியம்' மக்களால் பாராட்டப் பெறும். தான் கருதும் பொருளை நல்ல முறையில் மக்கள் மனத்தில் பதிய வைக்க விரும்பும் புலவன், நெஞ்சிலே பதியும்படி உணர்ச்சியூட்டி எளிய நடையில் கவர்ச்சி தரப் பேச வேண்டும். அல்லாவிட்டால்,பயனில்லை.மக்களுக்குக்கவர்ச்சி தரத்தக்க நிலையிலே பேசவேண்டுமானால், இனிய எளிய நடை-வழக்கொடுபட்ட உவமை-செவிக்கினிய சந்தம் - அறிவுக்கு விருந்தாகும் கற்பனை - இவை யாவும் அமையப் பாடுதல் இன்றியமையாததாகும். பாஞ்சாலி சபத முன்னுரையில், "எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருபவன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருபவனாகிறான். இரண்டோர் ஆண்டு நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லாருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்," என்று நம் பாரதியாரே கூறிச் சென்றிருக்கிறார்; பிறருக்குச் சொன்னது மட்

டும் அன்றி, தாம் பாடிய நூல்கள் எல்லாம் அந்த வகையிலே அமையும்படியும் ஆக்கி, மற்றவருக்கு வழி காட்டிச் சென்றிருக்கிறார். அவர் 'மறுமலர்ச்சி இயக்கத்தின் முதல்தந்தை' என்று மக்களால் போற்றப்படுகிறார். அவர் நூல்களும், பிற்காலப் புலவர்களுக்கு வழிகாட்டும் எடுத்துக் காட்டாய் நிற்கின்றன.

கவிஞர் பாரதியார் இயற்றிய நூல்கள் யாவும், 'பாரதி நூல்கள்' என்ற பொதுப் பெயரால் வழங்கப்படுகின்றன. அவற்றைக் காவியம், வசனம், கட்டுரை என்னும் முப்பெரும்பிரிவுகளாக நாம் பிரிக்கலாம். அவரியற்றிய பாடல்களுள் தோத்திரப்பாடல்கள், வேதாந்தப்பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்தி சூடி, பாப்பாப் பாட்டு, பாரதி அறுபத்தாறு, முரசு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் என்பவை காவியங்களைச் சாரும்; ஞானரதம், சித்தக்கடல், ஜகத்சித்திரம், விடுதலை, பதஞ்சலி யோக சூத்திரம், வேதரிஷிகளின் கவிதை, கீதை முன்னுரை, சந்திரிகை, நவதந்திரக் கதை, தராசு என்பன, அவரியற்றிய வசன நூல்கள் ஆகும். அவர் எழுதிய கட்டுரைகளோ, தத்துவம், சமூகம், மாதர், கலைகள் என்ற பலவேறு தலைப்புக்களிலே பிரித்து வெளியிடத்தக்க அளவிற்குக் கணக்கின்றி இருக்கின்றன. இவை எல்லாமே நாம் முற்சொன்னபடி எளிய இனிய நடை வாய்க்கப் பெற்று, 'பாடிய வாய் தேனூறும்' என்னும்படி இனிமை பெற்று உயர்ந்துள்ளன. கருத்துக்களோ, மக்கள் வாழ்

வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் 'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' பற்றிய அடிப்படைமேல் எழும்பியவை ஆகும்.

1. தேசீய கீதங்கள் :

தமிழ் மொழிக்குப் புதிய சுவையும், தமிழுலகத்திற்குப் புதிய உணர்வும், தமிழ் மக்கட்குப் புதிய கருத்தும் தந்து சிறந்து நிற்பன 'தேசீய கீதங்களே' ஆகும். இவைகளைப் பாரதியார் பல பல சூழ்நிலைகளில் பாடினார். இவைகளில் 'தேச பக்தி' உயிர் நிலையாய் விளங்குகின்றது. ஒற்றுமை, நாட்டன்பு, கடவுள் வழிபாடு, உயிர் நேயம், விடுதலை வேட்கை ஆகிய நற்பண்புகள் பலவும் இப்பாடல்களில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களைப் படித்து மகிழ்ந்த ஒருவர், "அதிவேகமாய்ப் பறக்கும் திறத்தாலும், இறகுகளின் வண்ண வனப்பினாலும், உள்ள முருக்கும் பாட்டின் இனிமையாலும் செருக்குற்ற பறவைக்கு இவர் பாட்டை ஒப்பிடலாம்," என்று பாராட்டியிருக்கிறார்.

2. கண்ணன் பாட்டு :

கண்ணன் இந்திய நாட்டிற்கே ஓரளவு குல தெய்வமாகப் போற்றப்படுபவன் ஆவன். அவன் மீது பத்தி பூண்டு பாடல்கள் பாடாத கவிகள் நம் நாட்டில் அருமை. பாரதியாரும் கண்ணன் வழிபாட்டிலே கருத்துக்கொண்டவர்; வைணவ ஆழ்வார்களால் பாடப்பட்ட நாலாயிரப் பிரபந்தத்தில் நன்கு பதிந்த ஞானம் உடையவர். அப்பிரபந்தங்களின் வழியையொட்டியே பாரதியார், கண்ணன் பாட்டை இயற்றியுள்ளார். இத

னுள், கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும், ஆண்டானாகவும், அடிமையாகவும், குருவாகவும், சீடனாகவும், நாயகனாகவும், நாயகியாகவும் பாவித்துப் பலதிறப்பட நயம்படுத்திப் பாடியுள்ளார். கவியளவிலே பார்த்தால், அவற்றின் சுவை தேனினும் இனியதாயிருக்கிறது. பாட்டுக்களில் பெரும்பாலன தாளத்தோடு பாடத்தக்க பண் அமைதியோடு கூடியுமுள்ளன. 'தமிழிலே வருங் காலத்தில் வளம் பெறத்தக்க புதிய இலக்கிய வகையுள் இது ஒன்று,' என்று சுருங்கச் சொல்லலாம்.

3. குயிற்பாட்டு:

அமரகவி பாரதியாரின் கற்பனை வளமும், கவித்திறனும் கூடி முடிவெல்லையைக் கண்ட நூல் 'குயிற்பாட்டே' ஆகும். இதனைப் பாரதியாரே, 'கவிதை வெறி மூண்ட போது காணக் கூடிய கனவின் நிகழ்ச்சி' என்று கூறிச் சென்றிருக்கின்றார். கனவு யாரும்காணலாம்; அதனை அழகாகப் பிறருக்கு எடுத்துச் சொல்வது எவரால் முடியும்? பலராலும் எளிதில் முடியாத ஒன்று, இதில் முடித்துக் காட்டப் பெற்றிருக்கிறது. வெளித் தோற்றத்திற்கு ஒரு காதற்கதையைப் போலக் காணப்படினும், வேதாந்த நாட்டத்தை உள்ளுறையாகப் பெற்றது இது. 'உண்மைக் காதலின் பாதை கரடுமுரடானது,' என்ற உயிர்நிலை வெகு தெளிவான முறையில் கதை மூலம் காட்டப் பெறுகிறது. இந்நூலில், மாடு, குரங்கு, குயில், இயற்கைக் காட்சி முதலியவை பற்றிய வருணனைகள் நமக்குப் படிக்கப் படிக்

கத்தெவிட்டாத இன்பம் தருவனவாய் உள்ளன. சொற்சுவை, பொருட்சுவை, சிறந்த கற்பனை, நல்ல உவமை - ஆகிய இவைபற்றியும், இந்நூல் தமிழிலக்கியத்தில் எந்த நூலுக்கும் பின்னிட்டதன்று.

4. பாஞ்சாலி சபதம்:

இஃது ஒரு புது மாதிரிக் காவியம். மகாபாரதக்கதையிலே வரும் 'திரௌபதி துகிலுரிதல்' நிகழ்ச்சி மிக உருக்கமானது. அதனை உயிர் நிலையாக அமைத்து, துகிலுரியும் கதையைத் திரௌபதியின் சூளுரையுடன் முடித்து, 'பாஞ்சாலி சபதம்' என்ற பெயரால் பாரதியார் இந்நூலை ஆக்கியுள்ளார். இது பழைய காவிய இலக்கணப்படி, கடவுள் வாழ்த்தொடு தொடங்கி, கடல், நதி, மலை, நாடு, இயற்கை வருணனை முதலிய அங்க அமைப்புக்களை உடையதாய், 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்,' என்ற முடிவுடன் முற்றுப்பெற்றிருக்கிறது. பாரத முதல் நூலில் கண்டிராதபடி, தம் கருத்தினுக்கு இயைந்த சில மாறுதல்களுடன் பாரதியார் இந்நூலை இயற்றியுள்ளார். இதனை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே சொல்லிவிட முடியும். இந்நூலிடையே திருதராஷ்டிரன் உயர்ந்த குணங்கள் உடையவனாகவும், சூதில் விருப்பம் இல்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும், காட்டப்படுகிறான். பாஞ்சாலி, விடுதலை வேட்கை பூண்ட ஒரு புதுமைப் பெண்ணாக இதில் காட்சியளிக்கிறாள். 'தருமன் மதியினம் நாட்டினையே அலங்கோலப்படுத்

திற்று,' என்ற கருத்திலே, அதிக அழுத்தம் கொடுத்துப் பேசியுள்ளார் கவிஞர். தமிழ் மக்களுக்குப் பழங்கதை ஒன்றால் புதிய உணர்வு தரவேண்டிய நோக்கத்தோடு அவர் சிலமாற்றங்களுடன் இதனை இயற்றியுள்ளார் என்றே தோன்றுகிறது.

5, **புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு** என்னும் இந்நான்கு நூல்களும் ஒரே நோக்கங் கொண்டு எழுதப் பெற்றவை. கவிஞர் தம் அனுபவங்களையும் எண்ணங்களையும் சிறுபிள்ளைகட்குச் சொல்லும் நோக்கும் போக்கும் உடையவை இவை. புதிய ஆத்திசூடியில் புதுமைக் கருத்துக்கள் பல காணலாம். பாப்பாப்பாட்டு, குழந்தைகளுக்கு மேலானவழிகளைக் கற்பிக்கும் ஒரு நீதிக் களஞ்சியம். தாய்மொழி வாழ்த்து, பெற்றோர்ப் பேணல், நாட்டன்பு என்ற மேலான கருத்துக்கள் இதனுள் வற்புறுத்தப் பெற்றிருக்கின்றன. சூரியன், சந்திரன், விண் மீன், கடல், காற்று இவைகளைப் பற்றி, **'காட்சி'** நூலில் மிக அழகுபடப் பாரதியார் வருணனை செய்திருக்கிறார். அவற்றின் மூலம், வேதாந்தத்தை வெளிப்படுத்துகிற அழகு மிக உயர்ந்து தோற்றுகிறது. புதுவை மணக்குளப் பிள்ளையாரின் மீது பாடப்பட்ட நூல், **'விநாயகர் நான்மணி மாலை'** என்பது. தெளிவு பெற்ற நடையிலே அமைந்து பத்திச் சுவையூட்டுவதில், இணையற்ற நூல் இது. வேதாந்தப் பாடல்களோ, மனத்தெளிவையும் ஆறுதலையும் அளிக்கும் வகையில் மிகச் சிறந்து விளங்குகின்

றன. மற்றைய நூல்களிற்போல, உலகமே, பொய்,' என்ற பொய்யுணர்ச்சியோ, அன்றி 'மனைவி மக்களை விட்டு ஓட வேண்டும்,' என்ற வெறுப்புத்துறவுக் கருத்தோ, இதில் வற்புறுத்தப்படுவதில்லை என்பது மட்டும் அன்றி, அவை வெறுத்தொதுக்கப்பட்டுமிருக்கின்றன. ஒரே தெய்வ உடன்பாடு, அன்புருவ வழிபாடு என்னும் மேலான கொள்கைகளே இதனுள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன, தோத்திரப் பாடல்கள் பல தெய்வங்கள்மீது அவரால் இயற்றப் பட்டுள்ளன. எனினும், அவர் சக்தி வழிபாட்டினர் என்பது தெரியவருகிறது!

இங்ஙனம், பாரதியாரியற்றிய நூல்கள், தமிழ் உள்ள மட்டும், தமிழர் உள்ள மட்டும், தமிழகம் உள்ள மட்டும் அவரது புகழுடம்பின் சின்னமாய் நின்று நிலவும்.

IX அவர் அமரர்

'அவதாரம்' என்பது வடசொல்; அதன் பொருள், 'மேலிருந்து கீழிறங்குதல்' என்பர் ஆன்றோர். திருமாலாகிய பரம்பொருள், 'இராமன், கிருஷ்ணன்' என்ற முறையிலே, மனித உருத் தாங்கிக் கீழுலகத்திலே வந்து பிறந்த வகையினையே 'அவதாரம்' என்று பாராட்டுவது உண்டு. இங்ஙனம், தெய்வநிலை தெளிவதை விடுத்து, வள்ளுவனார் மற்றோர் அழகான கருத்தினைக் காட்டியுள்ளார்:

"நம்மை ஒத்த மனித வடிவினன் ஒருவன் நல்லறிவு பெறுகிறான்; நன்மை தீமை பகுத்துணருகிறான்; நல்லதையே செய்து தீயதை விலக்கி வாழ்கிறான். அதனால் அவன், மக்களினத்திலே காணப்படும் சாதாரணக் குறைகளை மேற்கொள்ளாது உயருகிறான்; தான் உயர்வதுடன் நில்லாது, மற்றவர்க்கும் எடுத்துக் காட்டாய் நின்று, நன்னெறியிலே ஒழுகுமாறு செய்து, அவர்களையும் தெய்வநிலைக்கு ஏற்றுகிறான். இப்படி வாழவேண்டிய முறையிலே வாழ்ந்து, பிறரையும் வாழ்விக்க வந்த ஒருவனே 'வானுறையும் தெய்வமாக' நாம் போற்ற வேண்டும்,"

என்கிறது அவரியற்றிய அருமைக் குறள் நூல். கீழ் நிலையிலேயிருந்து, ஒழுக்கத்தின் விழுப்பத்தால் மேலோங்கி நின்று, பிறரையும் உயர்த்தும் செயலளவிலே 'தெய்வநிலை' கண்டு உணர்ந்து போற்றிய வள்ளுவர் கருத்து மிகவும் நயம் உடையதாகும்.

புலவர்களும் நம்மையொத்த மனிதர்களே ஆவார்கள்; ஆனால், நம்மினும் பேரறிவு படைத்தவர்கள்; நன்மை தீமைகளைச் செவ்வனம் பகுத்துணர்கிறவர்கள்; உலகிலே மறைந்து கிடக்கும் பேருண்மைகளைக்கண்டு துலக்கி வாழ்க்கைக்குப் பயன்படும் முறையிலே அவர்கள் செய்து தருகிறார்கள். இங்ஙனம், அவர்கள் மக்கள் வடிவினர்களானாலும், செயல் முறையால் வாழ்க்கை நிலையிலே உயர்ந்து காட்டித் தெய்வ நிலைக்கு ஏறுகிறார்கள். வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்க்கும் வழி காட்டிய அவர்களைத் 'தெய்வம்' என்றே உலகு போற்றுகின்றது. காரணம், தேவ உலகிலிருந்து பிறந்த 'தெய்விக அமிசம்' என்பதன்று; நம்மொத்துப் பிறந்து, நாம் செல்லும் தீய வழியிலே செல்லாது, பிறரையும் நல்வழிப்படுத்துகிறார்கள் என்ற கருத்தே ஆகும். அமர கவி பாரதியார், கம்பர் பெருமையினை நன்கு உணர்ந்தவர். புலவர்களைத் தெய்வம் என்று கண்டால், 'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல் யாங்கணுமே கண்டதில்லை,' என்று அவர் சொல்லும்போது, கம்பரைப்பற்றி நாம் என்ன கருத முடியும்? கம்பரைக், 'கடவுளர் கடவுள்' என்று பாரதி

யார் சிறப்பிக்கிறார் என்றே சொல்லலாம். அதனை வள்ளுவர் வகுத்த வழி பற்றியே மிக அழகிதாகத் தெரிவிக்கிறார். "கம்பன் என்ற வன் ஒரு மானிடன். ஆனால், அவன் ஒருவன் தான் 'வாழ்ந்தவன்' என்று சிறப்பித்துப் பேசுப் படுபவன். அவன் வாழ்ந்த வகை அவனுக்கு 'அழியாத அமரத்துவம்' அளிக்க, அவன் கடவுள் இயல் பெற்றான். அதனை நம் பாரத நாட்டு மக்கள் அறிய முயலவில்லையே!" என்று ஏங்கிப் பேசுகிறார்!

இதே நிலையில் நின்று நாமும் சிறிது சிந்திப்போம்: பாரதியாரும் மக்கட்பிறப்பினரே அவர் மேலறிவு பெற்றார்; நாட்டு நிலை கண்டார்; நிலைமை தாழ்ந்ததற்கு உரிய குறைகளை உணர்ந்தார்; உணர்ந்த அளவிலே மனம் வெதும்பினார்; வெய்துயிர்த்தார்: ஊமையராய்க் குருடர்களாய்ச் செவிடர்களாய் வாழும் மக்களைத் தட்டி எழுப்பினார்; நாட்டிடைச் சுதந்தர வேட்கையைப் பரப்பினார்; அடிமைத் தளையைத் தூவென்று தள்ள, மக்கட்கு ஆண்மை அளித்தார்; அருமைக் கவிகள் பல செந்தமிழிலே பாடித் தந்தார்; பிறர்க்கென வாழ்ந்து சிறந்து நின்றார்; இன்று அதனாலேயே தெய்வ நிலைக்கு ஏற்றிப் போற்றவும் பெறுகிறார். ஆம்! பாரதியார் என்றவர் மானுடர்தாம். அவர் வாழ்ந்தார்; நம்மையும் வாழ வைத்தார்; தமிழமுது தெளிந்தது. அதன் சுவையை நமக்கு ஊட்டினார்; நம்மையும் அமரர் சிறப்புப் பெறச் செய்தார். அவர் அமரர்; பிறப்பு இறப்பில்

லாதவர். என்றும் இருப்பவர். அவர் வாழ்க!

பாரதியார் அமர கவிஞர்; தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத தூயர். தமிழுள்ள அளவும், தமிழருள்ள அளவும் அவர் நூல்கள் பொன்றாது நின்று நிலவும். 'இறவாத புகழுடைய பெருநூல்கள், அவை. அவை மட்டும் வாழ்ந்து பயனில்லை. நாமும் அவற்றைக் கடைப்பிடித்து நல் வாழ்வு வாழும் வகை முயல வேண்டும். 'அமர வாக்குப் பொய்த்தல் இல்லை,' என்பர். அது முழு உண்மை. அமர கவிஞர் பாரதியார் பாடியவை யாவும் பலித்து வரக் காண்கிறோம்—ஒரு துறையில் அல்ல; எல்லாத் துறையிலும்! 'காசியில் பேசுவதனைக் காஞ்சி நகர்ப் புலவர் கேட்க வழி வேண்டும்,' என்றார் அவர். இந்த அமர வாக்கு இன்று பலித்தது! 'ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில்,' என்றார் அன்று; இன்று, 'ஆண்டவன் முன் அனைவரும் சமம்,' என்ற முறையிலே சட்ட திட்டங்களை மாறிவிட்டன. இவ்வளவு ஏன்? நாட்டு நிலை குறித்து அன்று அவர், 'இந்தச் சன்மத்திலே விடுதலையுண்டு—ஐயமுண்டு—பயமில்லை,' என்றார். இந்நாளில் அவர் வாக்கின்படி சுதந்தரமும் பெற்றோம்! எல்லாப் படியாலும் அவர் அமரரே! அவர் நிலை கண்ட மற்றொரு பாரதியார், "வீர சுதந்தர சக்திதான் அவன் வேடம் புனைந்து இங்குப் பாடிற்று," என்று உண்மை துலக்குகிறார். நாமும் அவர் வழி பற்றி வாழ்ந்து, நலம் பெறுவோமாக!